# ஞானச்சுடர்




கார்த்திகை

2023

31ஆவது மலர்


வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்த லரிது.**

**பொருள் :** அனுபவிக்கப்படும் கோடி பொருள்களை ஒருவன் முயன்று சேர்த்து வைத்தாலும் அவனால் அவைகளை விதிப் பயனல்லாது அனுபவித்தல் முடியாது. (377)

**துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால**
**ஊட்டா கழியு மெனின்.**

**பொருள் :** ஊழால் வருந்துன்பங்கள் வராது நீங்குமாயின் வறியவர் துறவியர் ஆய்விடுவர். (பொருள்களில்லாதவர் துறந்தவர் போன்றவர். அவர் துறவாமல் இருப்பது ஊழ்வினையால் என்றவாறு) (378)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**ஈழநாடு வாழவந்த சிவதொண்டன்**




ஈழநாடு வாழவந்த எழில்மிகுந்த தொண்டன்
எளியவர்க்கும் பெரியவர்க்கும் ஏவல்செய்யுந் தொண்டன்
தாளமேள மில்லாமலே தான்வளருந் தொண்டன்
தன்னைப்போல அயலவரைத் தான்நினையுந் தொண்டன்
காளகண்ட னடியவர்க்குக் காவலான தொண்டன்
கங்குல்பகல் காணாமற் கருமமாற்றுந் தொண்டன்
நீளநினை நித்தியன்நீ யென்றுரைக்குந் தொண்டன்
நிட்டையிலே யெந்நாளும் நிலைத்துநிற்குந் தொண்டன் 01

ஈழநாடு வாழவந்த எங்கள்சிவ தொண்டன்
ஏழைகட்கும் பெரியவர்க்கும் ஏவல்செய்யுந் தொண்டன்
காளகண்ட னடியவர்க்குக் காவலான தொண்டன்
காமக்கு ரோதமோகம் நீக்கிவிடுந் தொண்டன்
வாழவெண்ணும் அடியவர்க்கு வழிகாட்டுந் தொண்டன்
மறுபிறப்பை யிப்பிறப்பில் நீக்கிவிடுந் தொண்டன்
தாளமேள மில்லாமலே தான்வளருந் தொண்டன்
தாயாகி யனைத்துலகுந் தாங்கிநிற்குந் தொண்டன் 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 311



2023 **பொருளடக்கம்** கார்த்திகை


| | | |
|---|---|---|
| வார்த்தைப் பிரயோகத்தில்... | சி. நற்குணலிங்கம் | 01 - 03 |
| இறைவனும் இயற்கையும் | சு. இலங்கநாயகம் | 04 - 07 |
| ஆனந்தசாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 08 - 10 |
| ஆண்டவன் சந்நிதியில்... | சிவஅன்பு | 11 - 12 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 13 - 17 |
| சைவசமயமும் விஞ்ஞானச்... | வெ. சக்திவேல் | 18 - 19 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 20 - 21 |
| சூரபன்மனும் இறைபணியும் | செ. சிவபாதம் | 22 - 24 |
| கணவனால் கதியிழந்த... | வே.வே. அகிலேஸ்வரன் | 25 - 27 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 28 - 31 |
| கோவில்களில் அர்ச்சனை | தி. பொன்னம்பலவாணர் | 32 - 33 |
| அக்னி பகவான் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 34 - 35 |
| தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் | குணாகரன் | 36 - 37 |
| நல்லூர் தேரடிச் சித்தர் | கு. சோமசுந்தரம் | 38 - 41 |
| சித்தமலம் அறுவித்துச்... | சிவக்கொழுந்து | - 42 |
| தமிழ்ப்பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 43 - 46 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 47 - 48 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்


Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஐப்பசி மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் 310ஆவது மலருக்குரிய வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையினை ஆற்ற இருந்த பெரியவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வராதபடியால் ஆச்சிரம பேரவையைச் சார்ந்த இளைப்பாறிய அதிபரும் சமாதான நீதவானுமாகிய ஆ. சிவநாதன் அவர்கள் இம் மலருக்குரிய வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையினை ஆற்றினார்கள்.



இம் மலரானது ஒரு ஆன்மீக மலராக மலர்ந்து 25 வருடங்களாக நிலைத்து நிற்பதற்கு சந்நிதி வேலவனது பேரருளும், சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளுக்கு உத்வேகமாக செயற்படும் அன்பர்களும்தான் காரணம்.

இம் மலரில் பல கட்டுரைகள் இடம்பெற்றிருந்தாலும் ஆலய வழிபாட்டுக்கு வந்த என்னை மதிப்பீட்டுரையினை ஆற்றுமாறு கோரியிருந்த காரணத்தால் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கட்டுரைகளை மட்டும் என்னால் பார்க்க முடிந்தது. அக் கட்டுரைகளை பார்த்தபோது அவர்களது ஆரம்ப கட்டுரைகளில் இருந்து இம் மலரில் வெளிவந்த கட்டுரைகளின் தன்மை மெருகேறி அக் கருத்துக்கள் பலவிதமான உணர்வலைகளை ஏற்படுத்துகின்றது. அக் கட்டுரைகளின் தன்மையினை விரிவாக எடுத்துச் சொல்வதற்கு நேரம் போதாமையால் வாசகர்களாகிய நீங்கள் அனைவரும் வாசித்து அதன் பயனை அடைவீர்களாக என்று கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகள் சில இடம்பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

இன்றைய மனித வாழ்க்கை பொருள் தேடுவதை குறிக்கோளாகக் கொண்ட வாழ்க்கையாகவும், குழப்பங்கள் நிறைந்த வாழ்க்கையாகவும் இடம்பெற்று வருவதை நாம் காணமுடிகின்றது. அதேநேரம் இந்த நோய் எமக்கு ஏன் வந்தது? எப்படி வந்தது என்று விளங்கிக்கொள்ள முடியாது. புற்றுநோய் போன்ற உயிர்கொல்லி நோய்களால் சிறுவர், இளைஞர், யுவதிகள் என்ற வேறுபாடின்றி அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கின்ற மக்களும் எம் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இத்துடன் நீரிழிவு, கொலஸ்ரோல் போன்ற பலவித நோய்களாலும் வயது வித்தியாசமின்றி துன்பப்படுகிறார்கள். இவை எல்லாம் சாதாரண விடயங்கள் போல் தெரிந்தாலும் ஆத்மீக நம்பிக்கை கொண்டவர்கள் இவற்றையெல்லாம் சாதாரண விடயங்களாக எடுக்கமாட்டார்கள்.

கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் இவ்வகை நோய்கள் பீடிப்பதற்கு அறம் தவறாத வாழ்க்கையை மனிதன் வாழ வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டு அதன்படி ஒழுகுகின்றார்கள். அதுமட்டுமன்றி இவ்வாறான மனித அவலங்களை அதிக அளவிலும் ஆழமாகவும் சந்திக்க நேருகின்றபொழுது சராசரி மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கூட வாழ்க்கையின் உண்மையை உணர்ந்து தமது வாழ்க்கையை பக்குவப்படுத்துகின்ற நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

பலவித வைத்தியசாலைகளில் எந்த பாவமும் செய்யாத பலர் பலவிதமான நோய்களுக்கு உட்பட்டு அதனால் அவர்கள் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற துன்பங் களையும், கஸ்ரங்களையும் அனுபவிக்கின்ற நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதேநேரம் அன்றாட வாழ்க்கையில் மிக மோசமான, பாவமான காரியங்களைச் செய்து அடாவடித்தனமாக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு எவ்வாறான பெரிய துன்பங்களை அனுபவிக்கப் போகின்றார்களோ என்பதை எம்மால் ஊகிக்க முடியாதுள்ளது.

ஆம் சாதாரணமாக அனைவரும் தெரிந்துகொள்ளக்கூடிய இந்த உண்மையை உணர்ந்து அறத்தின் வழி எமது வாழ்க்கையை நெறிப்படுத்தி வாழ்வோமானால் எமது வாழ்வு ஓரளவுக்கேனும் நோய் துன்பமின்றி வாழ்வதற்கு வழிசமைக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அனைவரும் அறத்தின் வழி வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**
(கனடா)

**K. கனகசபேசன்**
(கனடா)

**உரிமையாளர்**
(E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்)

**ச. ஜெயதாசன்**
(கருகம்பனை, காங்கேசந்துறை)

**திருமதி தங்கராசா சரஸ்வதி**
(புலோலி மேற்கு)

**ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)

**உரிமையாளர்**
(சிவா பிரதேர்ஸ், யாழ்ப்பாணம்)

**மா. ஞானலிங்கம்**
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)

**சி.வ. முருகையா**
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)

**து. நாகேந்திரம்**
(நல்லூர்)

**S. மங்களரூபன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)

**சின்னையா ரஞ்சிதமலர்**
(மல்லாகம்)

**த. கணபதிப்பிள்ளை**
(உடுப்பிட்டி)

**கி. பகவத்சிங்கம்**
(இளை. அதிபர், நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.க. ஸ்ரீதரன்

(கரவெட்டி)

இ. தம்பிரத்தினம்

((முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)

**திருமதி P. குகதாசன்**

(K.K.S. வீதி, இணுவில்)

**P. நமசிவாய**

(அல்வாய் மத்தி)

**இ. சிவராசா**

(கரவெட்டி கிழக்கு)

**சி. விஜயகுமாரன்**

(உரும்பராய்)

**தி. ஸ்ரீராகவன்**

(வியாபாரிமூலை, பருத்தித்துறை)

**செல்வநேசன் கஜன்**

(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)

**க. பரராஜவிருந்தம்**

(காவில், கரணவாய்)

**சு. தில்லையம்பலவனார்**

(இளை. விவாகப் பதிவாளர், புத்தூர்)

**கந்தசாமி கதிர்காமத்தம்பி**

(மல்லியோடை, வல்வெட்டி)

**K. மகேந்திரன் J.P.**

(நவநீதபதி, இமையாணன்)

**திரு செந்தில்நாதன்**

(கொக்குவில் கிழக்கு)

**R. பத்மா**

(சுண்டுக்குளி)

**கே.எஸ். ஆனந்தன்**

(இணுவில்)

**வைத்திலிங்கம் உதயமலர்**

(கரணவாய் தெற்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோகராசா குமார்**
(ஆலடி வீதி, மட்டுவில் கிழக்கு)
**அ. தில்லைநாதன்**
(சிவன்வீதி, ஆவரங்கால்)
**செ. பாலச்சந்திரன்**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**சுபத்திரா விவேகானந்தன்**
(அளகொல்லை, அளவெட்டி)
**த. சந்திரசேகரம்**
(நாகர்கோவில்)
**கனகலிங்கம் மயூரன்**
(பாரதிவீதி, அச்சுவேலி)
**ச. வதனி**
(நீர்வேலி மேற்கு)
**மு. பாலசிங்கம்**
(சுண்ணாகம்)
**நீ. மயில்வாகனம் J.P.**
(வருணன், அச்சுவேலி)
**T.N. இராஜா**
(பொன்கிளர், சங்கானை)
**சோதிரட்ணம் அனுஷியா**
(அரசடி சந்தி, நவாலி)
**செ. உமாபதி**
(பிராமண வீதி, தும்பளை)
**V. சந்தனத்தேவன்**
(தூதாவளை, கரணவாய்)
**S. செந்தூரன்**
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
**திருமதி தயாநிதி சுசிகலா**
(தெல்லிப்பழை)
**செ. சுப்பிரமணியம்**
(யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A. பிரதாபன்**
(சந்திரபுரம், உடுவில்)
**வை. இராசேந்திரம்**
(இணுவில்)
**C.H. புவனேஸ்வரி**
(மானிப்பாய்)
**திருமதி ஆறுமுகம் உமாதேவி**
(பண்ணாகம், சுழிபுரம்)
**திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்**
(உரும்பராய்)
**V.S. மருதலிங்கம்**
(அரசடி சந்தி, மானிப்பாய்)
**அ. பாலேஸ்வரி**
(கதிரிப்பாய், அச்சுவேலி)
**செல்வி க. கமலாம்பிகை**
(ஆதவன் ஸ்ருடியோ, மீசாலை)
**க. திருச்செந்தூர்**
(வீரப்பதிராஜன், கரணவாய்)
**K. தங்கவேலாயுதம்**
(பருத்தித்துறை)
**சிவகுரு குகதாசன்**
(செல்வமதி, ஆவரங்கால்)
**மோகன் புவனா**
(புத்தூர்)
**வைத்திலிங்கம் பிரபாகரன்**
(துரைவீதி, கொக்குவில்)
**திருமதி பிரதீபன் பிரதீபா**
(அச்சுவேலி)
**க. இந்திராதேவி**
(பருத்தித்துறை)
**திரு செல்வராஜா J.P**
(கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும்

*–திரு சி. நற்குணலிங்கம்* அவர்கள்–

ஒவ்வொருவருக்கும் உடல் நலம் எவ்வளவு முக்கியமோ அதேபோல் மனநலமும் முக்கியமானதாகும். மனநலத்தைப் பாதுகாக்க பல வழிகள் உள்ளபோதும் அவற்றுள் சிறந்தது வார்த்தைகளைக் கையாளும் முறை. கூரிய வாளைவிட எமது வாயிலிருந்து வெளி வருகின்ற வார்த்தைகளுக்கு வலிமை அதிகம். வாழ்வின் மகிழ்வுக்கு உறவின் பலத்துக்கு அன்பான சொல்லாடல் அவசியமானதாகும். எமது நாவிலிருந்து வெளிவரும் ஒரு வார்த்தைகூட மிகப் பெரிய எதிர்விளைவை ஏற்படுத்தவல்லது. இதனால்தான் எமது முன்னோர்கள் நாகாக்க எனக் கூறி வைத்துள்ளனர். அரசியல்வாதிகள், அரச, தனியார் ஊழியர்கள், குடும்பஸ்தர்கள், சாதாரண மனிதர்கள் இவர்களில் பெரும்பாலானவர்கள் வார்த்தைப் பிரயோகத்தில் அவதானக் குறைவாகவே நடந்துகொள்கின்றனர். இதனால் இங்கு நாமே நமக்கு பழி தேடுவதுடன், குழியும் தோண்டுகின்றோம்.

"உன்னைத் தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு, உயர்த்திப் பேசும்போது செவிடனாய் இரு, வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய்" என்றார் சுவாமி விவேகானந்தர். அன்பான வார்த்தைகளுக்கான செலவு அதிகம் இல்லை. ஆனாலும் அவை சாதிப்பது அதிகம் என்றார் பிலைஸ்பாஸ்கல். "சொன்ன சொல்லும், எய்த அம்பும், கடந்தகால வாழ்வும், அசட்டையாகக் கைவிட்ட வாய்ப்பும் திரும்பி வரமாட்டா" என்பது அராபியப் பழமொழி. "மனிதன் தன் பெரும்பாலான துன்பங்களைத் தன் பேச்சின் மூலமாகத்தான் தேடிக் கொள்கின்றான்" என்ற பொன்மொழிக்கு உரியவர் ரேபியா. "ஒரு நல்ல கருத்தைச் சொல்பவன், நல்ல பரிசு ஒன்றைக் கொடுப்பவன் ஆவான்" இது இயேசுநாதர் அருளிய வரிகள். சொல் பற்றி வள்ளுவர் கூற்று, "பேசுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் பிரிக்கமுடியாத இணைப்பை சொல் ஏற்படுத்த வேண்டும்" "திறன் அறிந்து சொல்லைப் பயன்படுத்த வேண்டும்". "இடம், பொருள், காலம், பயன் என்பவற்றை அறிந்து பேச வேண்டும்". இனியாவது வார்த்தைப் பிரயோகத்தில் அவதானமாக இருங்கள். ஏன்? இதைப் புரிந்துகொள்வதில் பின்னிற்கிறீர்கள்.

நாவால் கெட்டொழிந்தவர்கள் பலர், முன்பின் சிந்திக்காது வார்த்தைகளை அள்ளி வீசும்போதும் வேதனைகளை அள்ளி வீசுவதாக எண்ணுவதில்லை. வார்த்தைகளைக் கொட்டியபின்னர் வருந்துவதால் எந்தப் பயனும் இல்லை. மனதுக்கு இதமளிக்கும் வார்த்தைகளைப் பேசுவதால் கேட்பவரின் துன்பங்கள், கவலைகள் நீங்கிவிடும். மன அமைதியை ஆறுதல் வார்த்தைகளே வழங்கக்கூடிய வல்லமை கொண்டவை. மற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் நடந்துகொள்ளும் உயர்ந்த பண்பு பலரிடம் இல்லாதிருப்பது வருந்தத் தக்கதாகும். மனைவிகூட தனது கணவனின் அன்பான வார்த்தைகளுக்காகவே எப்போதும்

*உறுதியாய்த் தீர்மானித்தவனுக்கு எல்லாப் பிரச்சனைகளும் எளிதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருப்பாள். அன்றாட வேலைப்பளு, கவலைகள், மன அழுத்தங்கள், யாவும் அவ்வார்த்தைகளால் அமைதி அடைந்துவிடும். வீட்டில் பிள்ளைகளுடன் அன்பான வார்த்தைகள் கூறி மகிழ்வோமாக இருந்தால் பிள்ளையின் மனம் மகிழ்ச்சி அடைந்து எதிர்காலம் ஒளிமயமாகும். அலுவலகங்களில் மேலதிகாரிகள் தமக்குக்கீழ் பணிபுரியும் ஊழியர்களை பணி நிமித்தம் பாராட்டுவார்களாயின் பணிகள் சிறக்கும். அலுவலகம் முன்னேற்றம் காணும். அன்பான ஆறுதலான வார்த்தைகளுக்கு ஏங்கித் தவிக்கும் முதியோர்களுடன் இவ்வாறான வார்த்தைகளைப் பயன்படுத்துவதன்மூலம் அவர்கள் ஆறுதல் அடைவார்கள். பொதுவாக எம்மால் ஏனையோருக்கு உதவி செய்ய முடியுமோ இல்லையோ ஆனால் நிச்சயமாக ஆறுதல் வார்த்தைகளைக் கூறி அவர்களின் உள்ளக் குமுறல்களை, வேதனைகளைக் குறைக்க முடியும். ஆனால் நாம் அதைச் செய்ய விரும்புவதில்லை. அதற்கு மனம் இடம்கொடுப்பது குறைவாகவே உள்ளது.

நாம் எப்போதும் இதமான வார்த்தைகளைப் பயன்படுத்தும் வகையில் நடந்துகொள்வதன் மூலம் மற்றவர்கள் எம்மை விரும்பி ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகும். இவ்வாறில்லாது கடினமான வார்த்தைகளை பாவிப்பதால் மற்றவர்களிடமிருந்து பெரும்பாலானவர்கள் விரக்தியின் மத்தியிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். எனவே இவர்களிடமிருந்து வரும் வார்த்தைகள் மரியாதைக் குறைவானதாகவும், மதிப்பற்றதாகவும் காணப்படுகின்றன. வாயால் வார்த்தைகளை வெளியிடும்போது நாம் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இதமான வார்த்தைகளால் மற்றவர்களது இதயத்தைக் கொள்ளை கொள்ள வேண்டும். ஆனால் சிலர், எப்போதும் மற்றவர்களைக் குறை கூறுவதாகவும், கேலி செய்வதாகவும் நடந்துகொள்கின்றனர். இவர்களது நாவிலே சனி குடிகொண்டுள்ளதாக விமர்சிப்பார்கள். இது அவர்களுக்கு புரிவதில்லை. இவர்களின் இத்தகைய வார்த்தைப் பயன்பாடு நிரந்தரமான எதிரிகளை இவர்களுக்கு சேர்த்து வைக்கின்றது. பிரச்சினைகள் ஏதுமிருப்பின் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். அதை விடுத்து மனம் போன போக்கில் பேசுவது ஏற்றுக்கொள்ள முடியாது. வெளியே கொட்டிய வார்த்தைகளை எம்மால் ஒருபோதும் திரும்பவும் பொறுக்கி எடுக்க முடியாது. இயற்கை எமக்கு வழங்கிய உறுப்பை அவதானமாகப் பயன்படுத்துவது எமது கடமையாகும். "தன்னை எல்லா விதத்திலும் அடக்கப் பழகியவன் வெளியிலுள்ள எதற்கும் வசப்படுவதில்லை" என விவேகானந்தர் கூறியுள்ளார்.

வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டால் அவதானமாக இருக்கச் சொல்லும். ஒரு முறை பேச இரு முறை யோசி. எதுவும் சில காலம்தான். ஏழைக்கு முன்னால் நின்றுகொண்டு உனது செல்வம் பற்றிப் பேசாதே, நோயாளிக்கு முன் நின்றுகொண்டு ஆரோக்கியத்தைப்பற்றிப் பேசாதே. பலவீனமானவனுக்கு முன்னால் நின்று உனது பலம் பற்றிப் பேசாதே, மகிழ்ச்சியை இழந்தவனுக்கு முன் உன் சந்தோசம் பற்றிப் பேசாதே, சிறைக் கைதிக்கு முன் நின்று உன் சுதந்திரம்பற்றிப் பேசாதே, குழந்தைப் பாக்கியமற்றவனுக்கு முன்நின்று குழந்தையைப் பற்றிப் பேசாதே, அனாதைக்கு முன்நின்று பெற்றோர்பற்றிப் பேசாதே. உன் மதிப்பு உனது நாக்கில் உள்ளது. அன்பான சொல் மருந்தாக இருப்பதோடு வாழ்த்தவும்

*எதையும் தேடாமல் கண்டுபிடிக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கிறது. எந்த வார்த்தை பேச வேண்டும் என்று அறிந்து பேசுவதைவிட, எந்த வார்த்தையைப் பேசக்கூடாது என்பதை உணர்ந்து பேசுபவரே சமூகத்துக்கு வேண்டியவர் ஆவார்.

சில விடயங்களில் எங்கள் அபிப்பிராயங்களைப் பேசாமல் வாய் மூடியிருப்பது மேலானது. இருக்கும் இடம் அறிந்து விடயத்தை நன்கு புரிந்து குணமறிந்து பேசலாமா அல்லது விடலாமா எனச் சிந்திக்க வேண்டும். மதிப்பு என்பதே என்னவென்று தெரியாத கூட்டத்தில் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படுவதைவிட பேசாதிருப்பது நல்லது. இது கோழைத்தனமல்ல. உட்பூசலுடன் இயங்குபவர்கள், பொறாமைக்காரர்கள், நல்ல விடயங்களைக் காதில் போட்டுக்கொள்ளவேமாட்டார்கள். யாராக இருந்தாலும் பேசுமுன் உங்களை நிதானப்படுத்திக்கொள்ளுங்கள். நான்கு முட்டாள்கள் மத்தியில் நல்ல அறிவாளி எதுவுமே பேசமாட்டான். மனம் திறந்து பேசுங்கள், ஆனால் மனதில் பட்டதெல்லாம் பேசாதீர்கள். சிலர் புரிந்துகொள்வார்கள், சிலர் பிரிந்து செல்வார்கள். அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பாய், ஆணவமாகப் பேசினால் அன்பை இழப்பாய், வேகமாகப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய், கோபமாகப் பேசினால் குணத்தை இழப்பாய், வெட்டியாகப் பேசினால் வேலையை இழப்பாய், வெகுநேரம் பேசினால் பெயரை இழப்பாய், பெருமையாகப் பேசினால் ஆண்டவனின் அன்பை இழப்பாய். இனியாவது வார்த்தைப் பிரயோகத்தில் அவதானமாக நடப்பீர்களா? தனியாக இருக்கும்போது சிந்தனையிலும், கூட்டத்தில் இருக்கும்போது வார்த்தையிலும் கவனமாக இருக்க வேண்டும். ஊரோடு சேர்ந்திருக்க, உறவோடு மகிழ்ந்திருக்க, மக்களோடு உறவாட, சமுதாயத்தோடு தோழமைகொள்ள வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும்.

பிறருடன் ஒருவர் எப்படி உரையாட வேண்டும் என்பதைப் பலரும் புரியாமல், எந்த இடத்தில் எப்படி வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும் என்பதையும் புரியாமலும் பேசுவதால் இன்று எல்லா விடயங்களிலும் வெற்றியைவிட வாழ்வில் தோல்விகளைத்தான் தழுவுகின்றனர். எனவே எமது வாழ்வியலில் வார்த்தைப் பிரயோகத்தில் அவதானம் வேண்டும். இல்லையேல் வாழ்வில் நிம்மதியை இழக்க நேரிடும்.

---

## இறைவனிடம் எதைக் கேட்பது?

இறைவனிடம் நாம் ஏதேதோ வேண்டும் என்று வேண்டுகின்றோம். பொன் வேண்டும், பொருள் வேண்டும், வீடு வேண்டும், மாடு வேண்டும், பதவி வேண்டும், உதவி வேண்டும் என்றெல்லாம் கேட்கிறோம். எதைக் கேட்கவேண்டும் என்று நமக்குத் தெரியவில்லை. மேற்சொன்னவைகள் எல்லாம் இந்திரஜாலம் போல், கனவுநிலைபோல் தோன்றி மறையக் கூடியவை. அவைகளால் நமது ஆன்மாவுக்கு எந்தப் பயனும் இல்லை. எத்தனை செல்வம் இருந்தாலும் உண்பது நாழி உடுப்பது நான்கு முழந்தானே! பல வீடுகள் இருப்பினும் படுப்பது ஆறடி இடத்தில்தானே? பொன்னும் பொருளும் ஓரளவு இருந்தால் சரி. அளவுக்கு மேற்போனால் அவையே பெருந் துன்பத்தைத் தரும். குளிப்பதற்கு ஒரு ஆறு அல்லது குளத்தில் தண்ணீர் இருக்கவேண்டும். மார்பளவு, அல்லது இடுப்பளவு தண்ணீர் இருந்தால் அபாயமின்றிக் குளிக்கலாம். மிகுந்த ஆழமாக இருந்தால் அந்த நீரே நம்மைக் கொல்லும் அல்லவா! ஆகவே இந்த வரங்களையெல்லாம் கேட்காது இறைவனை நினைந்து உருகும் வரம் ஒன்றே கேட்கவேண்டும்.

*உண்மை எந்த நிற்பேதத்திற்கும் அஞ்சாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனும் இயற்கையும்

–திரு சு. இலங்கநாயகம் அவர்கள்–

ஒரு தச்சன் ஒரு கோயிலுக்கு ஒரு யானை வாகனம் செய்தான். இன்னொரு தச்சன் அதைப் பரிசோதித்துப் பார்க்கச் சென்றான். அவனோடு அவனது குழந்தையும் சென்றது. மர யானையைக் கண்ட குழந்தை பயந்தது. தகப்பன் அந்த யானைக்குக் கிட்டப் போகி றதைக் கண்ட குழந்தை "அப்பா யானைக்குக் கிட்டப்போகாதே, அது முட்டும்" என்று கதறியது. அப்போது தகப்பன் இந்த மரப்பொம்மை முட்டாது" என்று விளக்கம் செய்து குழந்தையையும் அதன் கிட்டவே கூட்டிச் சென்றான்.

குழந்தைக்கு அந்த வாகனம் நிஜமான ஒரு யானையாகவே தோன்றியது. குழந்தை யிடம் யானை என்ற உருவ நினைப்பு. அது மரம் என்கிற எண்ணத்தை குழந்தையிடமிருந்து மறைத்தது. அதேவேளை தச்சனிடம் அது யானை என்ற நினைப்பு மறைந்து மரம் என்ற எண்ணம் இருந்ததேயாகும். மரத்தைப் பற்றிய எண்ணம் தோன்றுங்கால் யானை பற்றிய எண்ணம் தோன்றுவதில்லை. யானை என்று எண்ணும்போது மரம் என்று தோன்றுவதில்லை.

"மரத்தை மறைத்தது மா மத யானை
மரத்தில் மறைந்தது மா மத யானை"

என்று இந்த இருவர் நிலையையும் திருமூலர் திருமந்திரத்திற் சொல்லியிருக்கின்றார். இவர் பெரிய தத்துவங்களை இலகுவான சிறிய உதாரணங்கள் மூலம் விளக்குவார். எதற் காக இந்தக் கதையைச் சொன்னார் என்பது அடுத்துவரும் இரு அடிகள் மூலம் விளங்கும்.

"பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
மரத்தில் மறைந்தது பார் முதற் பூதம்"

யானை வேறு, மரம் வேறு இல்லை என்பதுபோல் இறைவன் வேறு, இயற்கை வேறு இல்லை என்று இப்படி உதாரணம் காட்டி விளக்குகிறார் திருமூலர். பரமாத்மா என்ற மரத்தினாலேயே உருவானதுதான் இந்தப் பார் முதலிய பிரபஞ்சம் என்ற பொம்மை. குழந்தைக்குப் பொம்மையில் மரம் தெரியாததுபோல் நமக்கு பார் முதலான பிரபஞ்சங்கள் பரத்தை (இறைவனை) மறைத்துவிட்டன. ஞானிகளுக்கு எல்லாம் பிரம்மமயமாகவே தெரிகிறது. அவர்கள் விடயத்தில் பார் முதற் பூதங்கள் (இயற்கை) பரத்தில் (இறைவனில்) மறைந்து போய்விடுகின்றன.

இயற்கையிலே பலவித சக்திகள் பல்வேறு வஸ்துக்களிடம் பரந்து காணப்படுகின்றன. ஒன்றின் சக்தியைவிட இன்னொன்றுக்கு சக்தி அதிகம். மனிதனின் உடற் பலத்திலும் பார்க்க மாட்டுக்குப் பலம் அதிகம். மாட்டைவிட ஒட்டகத்திற்கு அதிக பலம். ஒட்டகத்தைவிட யானைக்கு அதிக பலம். ஆனால் புத்தி பலத்தை நோக்கும்பொழுது மரத்தைவிடப் புழுவுக்கு அதிகம், புழுவிலும் பார்க்க எறும்புக்கு அதிகம், எறும்பிலும் பார்க்க பறவைக்கு அதிகம். பறவையைவிட மிருகத்திற்கு அதிக புத்தி. மிருகத்தைவிட மனிதனுக்கு அதிக புத்தி பலம்.

*கடவுளிற்கு அடுத்தது பெற்றோரே தெய்வம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது உடற்பலம், உளப்பலம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு ஒரு வீடு கட்டுகின்றான். குருவி தன் புத்தி பலத்தையும் தேக பலத்தையும் துணைக்கொண்டு ஒரு கூடு கட்டி வாழ்கிறது. இந்தவகையில் ஆராயும்போது பௌதீகபலம், புத்திபலம் எல்லாம் இருக்கின்ற ஓர் ஆதார வஸ்த்துவும் இருந்தாக வேண்டும் என்பது தெரிகிறது. எனவே இந்த உலகத்தையும் உயிரினங்களையும் தோற்றுவிக்கின்ற புத்தியும் சக்தியும் கொண்ட ஒன்று இருக்கின்றதாக கருதவேண்டியுள்ளது. இதனையே நாம் இறைசக்தி என்கிறோம்.

மேலும் இயற்கையில் ஒன்றுக்கு ஒன்று எதிரான சக்திகளையும் காண்கின்றோம். உதாரணம் பனி, வெயில், இரவு - பகல், மென்மை - கடினம், அன்பு - வன்பு, இனிப்பு-கசப்பு இப்படிப் பலபல. இந்தவகையில் மனிதனிடத்து அமைதியின்மை, சஞ்சலம், ஆபாச திருப்தியின்மை போன்ற மனோநிலைக்கு எதிரான சஞ்சலமற்ற ஆபாசமின்றி, சாந்தமாகவும், திருப்தியாகவும் இருக்கும் வஸ்து ஒன்று இருக்கத்தான் வேண்டும். இந்த நிறைவான வஸ்துவைத்தான் இறைவன் என்கிறோம்.

இயற்கையில் சகலதும் மாறிக்கொண்டே இருக்கின்றன. சில மாறுதல்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. ஆனால் நாம் மாறாது என எண்ணும் மலை, சமுத்திரம் போன்றவைகூட காலக்கிரமத்தில் மாறிக்கொண்டேதான் இருக்கின்றன. இயற்கையில் எதுவும் மாற்றம் அடையும். இதற்கு எதிராக மாறாமல் நிச்சயமாக பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளான உள்பொருளான ஒன்று இருக்கத்தான் செய்யும். இதனையே சைவசித்தாந்தம் உள்பொருள் முப்பொருள் உண்மை என்ற கோட்பாட்டில் விளக்குகிறது. பதி, பசு, பாசம் எனப்படும் மூன்றும் அநாதியானவை, நித்தியமானவை எனத் திருமூலர் விளக்குகிறார்.

இறைவன் எப்படியாயினும் இருக்கட்டும். நாம் ஏன் அவரை வணங்க வேண்டும். ஆலயம் தொழுவது வேலை மினக்கேடு என்று சொல்லும் நாஸ்திகர்களும் உள்ளனர். எமக்குப் பற்பல தேவைகள் உண்டு. எம்மிடம் இருப்பது அற்பசக்தி. ஆனால் பரமனுக்கு ஒரு தேவையுமில்லை. அவரிடம் இருப்பது சர்வசக்தி. எல்லாம் வல்லவர் அவர். சக்தியிலும் ஞானத்திலும் மட்டுமல்ல் பெருங்கருணைப் பேராறு என்கிறார் மணிவாசகர். எனவே எம்மிடம் இருக்கும் குறையை நிரப்புவதற்கு அந்த நிறைவால்தான் முடியும். ஆகவே அவரை அன்போடு வழிபாடு செய்தால் நம் குறை போக்குவார்.

நமக்குத் தேவை இருக்கிறது என்றால் எமக்கு குறையும் உண்டு என்பது அர்த்தம். எமக்குத் தேவை இல்லை என்றால் நம்மிடம் நிறைவு உண்டு. தமது குறைகளைப் பூர்த்தி செய்யும் இறைவன் எமக்கு எதுவும் தேவையே இல்லை என்ற நிறைவையும் தந்து விடுவார். அந்த உயர்ந்த மேடு போன்ற நிறைவுள்ளவன், பள்ளமாக இருந்த எமது குறைகளைத் தூர்த்து தூர்த்து நிரப்பித் தனக்குச் சமமான நிலைக்கு ஆக்குவார்.

இயற்கை பஞ்ச இந்திரியங்களூடாக இன்பம் தருகின்றது. இறைவன் கருவி கரணங்களைக் கடந்து நின்று இன்பம் அளிப்பவன். இயற்கை வாயிலாகப் பெறும் இன்பம் சிற்றின்பம். இறைவனிடமிருந்து பெறுவது பேரின்பம். இயற்கை இறைவனது உண்மையை உணர்த்தும் சாதனம். இயற்கை எழிலிலிருந்து இறைவன் உண்மையை அனுமானிக்கின்றோம்.

*நிதானமும் உறுதியும் போட்டியில் வெற்றி தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவப் பெருந்தகையும் குறள் 27இல்
"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு"

ஞான இந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் தன் மாத்திரைகள் (தொழில்) முறையே ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன ஐம்பூதங்கள் முறையே நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் இவற்றின் குணம் முறையே திண்மை, குளிர்ச்சி, வெம்மை, பரவியிருத்தல், வெளியாதல் எனவே ஐம்பூதங்களூடாக இறைவனை ஞான இந்திரியங்கள் வாயிலாக அறிகின்றோம்.

மனிதன் பல ஆசாபாசங்கள் நிறைந்தவன். தனது ஆசையைப் பூர்த்தி செய்வதால் மகிழ்ச்சி அடைகின்றான். ஆனால் இது உண்மையான மகிழ்ச்சியா என்றால் இல்லை. ஏனெனில் அவனுக்கு இன்னோர் ஆசை பின்னர் வேறு ஆசை. இப்படி ஆசை, பூர்த்தி, மகிழ்ச்சி எனத் தொடர்கின்றது. இது ஒரு விதத்தில் இறைவனின் விளையாட்டு எனலாம். இன்னொரு விதத்தில் அவனின் கிருபை எனலாம். மனிதன் இந்த ஆசாபாசங்கள் எல்லாம் தன் சுகத் துக்காக என்று எண்ணுகின்றான். தனது இன்பத்திற்கு என்று ஆனந்தப்படுகின்றான். ஆனால் இறைவனோ ஜீவாத்மாக்கள் ஆசையின் நிமித்தம் பல பிறவிகள் எடுத்து தங்கள் கர்மத்தை அனுபவித்து இறுதியில் கர்மத்தை கழித்துக்கொண்டு மோட்ச நிலையைப் பெறவேண்டும் என்ற பெரும் எண்ணம்கொண்டு ஆசாபாசங்கள் மூலம் நல்வழிப்படுத்துகின்றான்.

இறைவன் உணவில் பல சுவைகளை வைத்து உண்ணவைக்கின்றான். ஏதோ ஒரு சுவை மட்டும் இருந்தால் உணவு உண்ண அலுத்துப்போகும். எனவே பல சுவைகளை நுகரவைத்து உடம்பை வளர்க்கச் செய்கிறான். உணவு இவனது நாவின் சந்தோஷத்துக்காக ஏற்படவில்லை. இவன் தன் கர்மாவை அனுபவிப்பதற்கு உடம்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். எனவே சுவையாகச் சாப்பிட்டோம் என்று மகிழவைத்து இவனது கர்மாவை அனுபவிக்க வசதியாக உடம்பை வளர்க்கின்றான்.

ஒரு சரீரம் பிறந்து வளர்வதற்காக இவ்விடம் கர்மத்தை வைத்துப் பின்னர் மோட்சத்தைக் கொடுக்கிறான் இறைவன். இவன் இப்படி வாழ்வதாலோ இவனால் இன்னொரு ஜீவன் பிறந்து வளர்வதாலோ என்ன பிரயோசனம். பழைய கர்மத்தை அனுபவிப்பது தவிர இதில் என்ன பயன்? இவனும் முத்தியடையக் காணோம். பொதுவாக எல்லா ஜீவன்களும் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களை அதிகப்படுத்திப் பாவத்தைப் பெருக்கிக் கொள்வதாகவே தெரிகிறது. கர்மத்தைக் கழித்து மோட்சம் அடைபவர் கோடியில் ஒருவர்கூடத் தோன்றக் காணவில்லை என்ற சந்தேகம் வரலாம். இதனை ஓர் உதாரணம் மூலம் விளக்க லாம். ஒரு மாமரத்தில் நிறையப் பழங்கள் உண்டு. பழம் உண்டாவதன் பயன் அதன் விதையிலிருந்து மீண்டும் மரம் தோன்றும். ஆனால் ஒவ்வொரு மாமரத்திலும் உண்டாகின்ற அத்தனை பழங்களில் உள்ள வித்துக்களும் மரமானால் உலகிலேயே வேறு எதற்கும் இடம் இராது. ஒரு மரத்திலுள்ள நூற்றுக்கணக்கான பழங்களில் ஒரே ஒரு வித்து மரமானால் நாம் மகிழ்ச்சி அடையவில்லையா? மீதி யாவும் பாழாய்ப் போய்விட்டனவே என்று வருத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகிறோமா? இதைப் போலவே நம்மில் கோடிக்கணக்கானோர் முத்தியடையாது போனாலும் பரவாயில்லை. யாராவது ஒருவர் முத்தியடைந்தாற் போதும். சிருஷ்டியின் பயன் அதுவே. இறைவன் நம்மில் யாருக்குக் கைகொடுத்து ஏற்றவேண்டுமோ அவனை உயர் நிலையில் வைப்பான்.

நமது கண்ணுக்குப் பிரத்தியட்சமாகத் தோன்றும் இயற்கை அமைப்பை அதன் இயக்கத்தை அனுமானம் ஆப்த வாக்கியத்தின்மூலம் ஆராய்ந்து அறிந்து இறை உண்மையை உணர்ந்து உய்தி அடைவோமாக.

*(சென்னிகுளநகர் - பாடல் போல)*

*சக்தி தேவி பதம் பணிவோம்*
*சகல சௌபாக்கியம் பெறுவோம் - அவள்*
*சேவடிகள் தினம் பணிந்து செந்தமிழால் பாடிடுவோம்*
*வாரீர் வந்து சேரீர்.*

*வீர சக்தியினைப் பணிவோம்*
*வெற்றியெல்லாம் பெற்று மகிழ்வோம் - எம்*
*வெவ்வினைகள் வேரறுமே வேதனைகள் ஓடிடுமே*
*விரைவோம் கழல் தொழுவோம்.*

*திருமகளின் திருவடிகள் துதிப்போம்*
*திருவாகும் பதினாறும் பெறுவோம் - அவள்*
*உருவங்களில் எட்டாகி திருவோங்கும் அருள் தருவாள்*
*அலைமகளின் அடி பணிவோம்.*

*கலைமகள் கழலினை பணிந்து*
*கல்வி கலைபெற்று மகிழ்வோம் - உலகில்*
*விலையில்லா வித்தைகளாம் அறுபத்து நான்கினையும்*
*பெறுவோம் பேணி நடப்போம்.*

*அன்னை அழகினைப் பாடி*
*அறுசுவை உணவுகள் படைத்து - எமது*
*முன்னை வினை ஓட முச்சக்தி புகழ்பாட*
*வாரீர் வந்து சேரீர்.*

*-திருமதி யூ.பி. ஆனந்தம்-*

நேரில் பார்ப்பவை நம்புவதற்குரியவை.

# ஆனந்த சாகரம்

(தொடர்ச்சி...

– *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

## மீண்டும் பிறவாநிலை பெறுவோம்

உயிர்கள் யாவும் அநாதியானது. என்றும் அழிவில்லாதது. உயிர்கள் அவ்வப்போது தமது உடலை மாற்றிக்கொள்கிறது. ஒவ்வொரு உடலுக்கும் ஒரு தாயுண்டு. அந்தத் தாய்தான் சகல சக்தியையும் உருவாக்கித் தருகிறாள். மனிதன் பிறந்தவுடன் முதலில் அறிந்தது தாயைத்தான். தாயின்மூலம் தந்தையையும், தந்தையின் மூலம் நல்ல குருவையும், குருவின்மூலம் தெய்வத்தையும் அறிகிறான். இதனையே மாதா, பிதா, குரு, தெய்வம் என்று கூறப்படுகிறது. தாய் அன்பையும், ஆற்றலையும் பக்குவமறிந்து போதித்து வல்லவனாக ஆக்குகிறாள். தாயை வழிபடக் கற்றுக்கொண்டதனால் தாய் வழிபாடே பின்னர் சக்தி வழி பாடாக மிளிர்ந்தது. தாய் வழிபாடு மிகத் தொன்மையானது.

இறைவன் செய்யும் எல்லாச் செயல்களும் சக்தியின்மூலம் நடைபெறுவதை சிவாகமம் உரைக்கிறது. சமயாசாரியார்கள் இறைவனை சக்தியோடு கண்டார்கள்.

"பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என சம்பந்தரும், "மாதர் பிறைக் கண்ணியானை" என அப்பரும், "வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்" என சுந்தரரும், "பெண் சுமந்த பாகத்தன்" என மணிவாசகரும் பாடியுள்ளனர்.

ஜீவாத்மாவை இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்து சிவ ஸாயுஜ்யத்தை தருபவளாக சக்தி விளங்குகிறாள்.

மகா கணபதியின் சக்தியாக சித்தி புத்தியும், பிரம்மனுக்கு அறிவுத் தெய்வமான சரஸ்வதியும், மகாவிஷ்ணுவிற்கு மகாலட்சுமியும், காலாக்னி ருத்திரனுக்கு மகா காளியுமே சக்தியாகும். இறைவனும், சக்தியும் என்றும் பிரியாதது. "அருளது சக்தியாகும்" என்கிறது சிவஞானசித்தியார். ஆகையால் அம்பிகை வழிபாடு மிகத் தொன்மையானது.

ஐந்தொழில் புரியும் அம்பலவாணனுடன், அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாகிய உலகமாதா, ஆன்மாக்களுக்கு அருள்புரிய அன்பே உருவாகக் காத்திருக்கின்றாள். ஜகன்மாதா வாகிய ஆதிபராசக்தி கிரியாசக்தி, இச்சாசக்தி, ஞானா சக்தியாக மூன்றுவித தேவிகளாக பிரபஞ்சம் முழுவதும் அருள் பாலிக்கின்றாள். சக்தி இல்லாவிட்டால் பக்தியுமில்லை. முத்தியுமில்லை. எல்லாவற்றிலும் நிறைந்த சக்தி. எல்லாவற்றையும் கடந்த சக்தி மெய்ப் பொருளான அன்னை மாதேவி கருணைக் கடலாக நம்மையெல்லாம் காத்து ரட்சிக்கிறாள். ஆன்மா இருள் அகல சக்தி வழிபாடு அவசியம். சக்தி என்பது தடையிலா ஞானமாகும். ஒளி பொருந்திய அன்னையின் ஞானப் பார்வை நம்மேல் பட இருளகலும்.

அம்மையப்பனை, சிவபெருமானை அடைய விரும்புவோர் முதலில் ஆதிபராசக்தி யாகிய உமையம்மையை வழிபட்டு, பின்னர் அப்பனை அடைதல் வேண்டும். "அருளது

*நிகழ்காலம் போல நல்ல நேரம் வேறு வாய்க்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாகும் அரன் தனக்கு” என்கிறது சிவஞானசித்தி. கருணைக் கடலான அன்னை நல்லன எல்லாம் தருகின்ற அன்னையாக தாயினும் சிறந்த தயையுடையவளாக அருள் பாலிக்கிறாள்.

சிவம் வேறு சக்தி வேறு அல்ல. அண்டங்களனைத்தும் சிவசக்தி மயமானது. ஜகன் மாதாவாகிய அன்னை; அன்னபூரணியாக வயிற்றுக்கு உணவையும், வாழ்க்கைச் செல்வங் களையும் ஞானத்தையும் தருபவள். ஜனன மரணச் சுழலிலிருந்து விடுவிப்பவளும் அவளே. அர்த்தநாரிசுவர ஸ்வரூபத்திலே விளங்கும் அம்மையப்பனை நித்தமும் நினைந்துருகி வழிபட்டு பிறவித் துயரிலிருந்து விடுபடவேண்டும்.

சக்தியின் ஆற்றல் இல்லாமல் தேவர்களும் சிறந்த தவங்களைச் செய்யமுடியாது படைத்தல் முதலான ஐந்தொழில்களும் நடக்காது. அவள் அருளன்றி திருநிறைப் பேற்றினை அடையமுடியாது என்கிறார் திருமூலர்.

அவளையறிய அமரருமில்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகு மாறறியேனே.

அவள் ஆற்றலின் வடிவம். ஆதிபரம்பொருளின் ஊக்கம். அதனை அன்னையெனப் பணிதல் ஆக்கம்.

“சக்தி சக்தி யென்று சொல்லு
சங்கடங்கள் யாவினையும் வெல்லு” என்று பாடுகிறார் பாரதியார். அன்னை மனோன்மணி கருணை பொழிவதற்காகக் காத்திருக்கிறாள். வேண்டுவார்க்கு வேண்டுவன அளிப்பவள். அரியாசனத்தில் ஆட்சிக்கோலத்தில் அவளைக் கண்டாலே கணகள் குளிரும்! நெஞ்சம் நெகிழும்! துன்பம் அகலும்! மனம் மகிழும்! கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பெருகும்! பேரொளி தெரியும்!

அன்னை ஸ்ரீ லலிதாம்பிகை சாந்த நாயகியாக பேரழகுடன், மனோன்மணி ரூபத்தில் ராஜராஜேஸ்வரியாக அரசவையில் கொலுவிருக்கும் திருக்கோலத்தை தேவ தேவியர் பரவசமடைந்து ஆயிரமாயிரம் நாமங்களால் வசினி என்ற வாக்குத் தேவதைகள் ஆராதித்தது தான் நாம் பக்தியோடு பாராயணம் செய்யும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம்.

லலிதா சகஸ்ர நாமத்தில் அம்பிகையைப் பிறப்பறுப்பவள். பிறவி எனும் காட்டுத் தீயை அணைக்கும் அருள்மழை. பிறவி நோயை அகற்றுபவள். பிறவிச் சக்கரத்தினை சுழற்றும் சக்ரதாரியாக, சூத்திரதாரியாக அம்பாளைக் குறிப்பிடுகிறது.

“கொடியே இள வஞ்சிக் கொம்பே”

அபிராமி அன்னையிடம் பிறப்பறுக்க விண்ணப்பம் வைக்கிறார் பட்டர்பிரான். இப்படிப் பிறந்தோமே எதற்காக? யாருக்காக? ஏன்? கேட்டுப் பிறக்கவில்லை! கேளாமல் பிறந்தாலும் எதற்காக?

*வாழ்க்கையின் விதிமுறைகளே மதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண், பொன், மண் அனைத்தையும் சேர்க்கவும், துய்க்கவும் மட்டுமே பிறக்கவில்லை. பிறப்பிக்கப்படவில்லை. கோராமல் கிடைத்தது என்றால் அது இறைவன் கொடுத்தது. எதற்காக? அவனை அடைவதற்காக. பூர்வபுண்ணியத்தின் காரணமாகப் பிறப்பு ஏற்பட்டாலும் இறைவனை அடைவதால்தான் பிறப்பு என்ற நோய் அறவே ஒழிக்கப்படும். மற்ற எந்த உயிரினத்துக்கும் இல்லாத மனம் என்ற ஒன்றை மனிதப்பிறவிக்கே இறைவன் அளித்துள்ளான். மனம் என்ற ஒன்றைக் கொண்டதால்தான் மனிதன் ஆகிறான். மனதின் வழி ஆசாபாசங்களை, கோபதாபங்களை, உயர்வு தாழ்வுகளை ஏற்படுத்திக்கொள்வதால்தான் பவம் என்ற சாகரத்தை மனிதன் அடைகிறான். "ஆசையே பிறப்புக்குக் காரணம்" பிறந்து, இறந்து, பிறந்து, "புனரபி ஜனனம், புனரபி மரணம்" இப்படி சதா சுழலும் வாழ்க்கை எதற்காக? நம்மைப் படைத்த இறைவன் யார்? எங்குள்ளான்? எதற்காக நம்மைப் படைத்துள்ளான்? என்ற சிறிய யோசிப்புகூட நம்மிடமில்லையே! நல்லன வரும்போது மகிழ்ந்து கொண்டாடுகிறோம். துன்பம் வரும்போது இறைவனைக் காரணமாக்குகிறோம். இப்படி இறைவனைத் தூஷிப்பது நன்றிகெட்டதனத்தைத் தானே காட்டுகிறது. நாம் தூற்றினாலும், கேட்டாலும், கேட்காவிட்டாலும் அள்ளி அள்ளித் தருகிறானே. "அகல்வாரைத் தாங்கும் நிலம்போல்" எம்பெருமான் கருணாமூர்த்தியை அடைவதனால்தானே பிராரப்தம் என்ற முன் வினையும், ஆகாமியம் என்ற தற்போதைய வினையும் களையப்பட்டு பிறப்பு அறுக்கப்படுகிறது. அந்தப் பற்றில்லாத பரம்பொருளை நாம் பற்றுவதால் உலகாசை எனும் பற்றினை விடுத்து, அவன் பதமலர் எனும் பற்றினை அளிக்கிறான். அனைத்தும் இறைவன் செயல் என்று அவள் கொடுப்பதை ஏற்றுக்கொண்டு வாழ்ந்தால் பிறப்பு அறவே அழிக்கப்பட்டுவிடும்.

தாயே! உன்னுடைய தாசன் நான். அதற்காக நீ என்மீது கருணைகொள்ள வேண்டும். அந்தக் கருணை என்னிடம் உண்டாவதால் நீ நானாகிறேன் என்கிறார் ஆதி சங்கரர். இறைவனின் கருணையால் கொடுப்பவனும், கொடுக்கப்படுபவனும், எடுப்பவனும் எடுக்கப்படுபவனும் என அனைத்தும் இறைவன் செயல். நான் எனது என்ற பற்றினைவிட்டு அவன் பதம் பணிந்தால் பிறப்பெடுத்ததன் பயனை அடைந்து "மீண்டும்" பிறவாநிலை பெறுவோம். அன்னையின் தாளினை அவளது தாளாக் கருணையால் பற்றினால், நாம் பற்று அறுந்து பிறப்பறுக்கப் படுவோம்.

அரணம் பொருள் என்றருள் ஒன்
றிலாத அசுரர் தங்கள்
முரண் அன்றழிய முனிந்த பெம்மானும்
முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற
நாயகி தன்னடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்
தார் இந்த வையகத்தே.

(தொடரும்...

கஷ்ரப்படாமல் வாழ்க்கை இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம்

– *திரு சிவஅன்பு* அவர்கள் –

இயற்கையை வழிபட்ட மனிதன் கோயிலை அமைத்து வழிபாடு செய்துவந்துள்ளமை "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழி மூலமாக உணரப் படுகின்றது. கோயிலில் "மக்கள் அனைவரும் சமம்" என்பதே நியதியுமாகும். இது முக்காலத் துக்கும் பொருத்தமானதாக உள்ளது. சைவ சமயம் மனிதனின் வாழ்க்கையை நெறிப்படுத்து வதையே கோட்பாடாகக் கொண்டு திகழ்கின்றது. அதன் சிறப்பம்சமாக அனைத்து மக்களின் உய்தி நோக்கியே சைவசமய கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. எம் ஆன்றோரால் வழிபடப் பட்ட முறைகள் இறைவனை அடைவதற்கான படிகள் என்பதைச் சைவசமயம் உணர்த்தத் தவறவில்லை.

பண்டைக் காலத்தில் ஆலயங்களிலும், மடாலயங்களிலும் கல்வி கேள்விகளிற் சிறந்த ஒழுக்கசீலமுடைய ஆசிரியர்கள், சைவப்பெரியார்கள், சமயப்பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள், வைத்தியம், இலக்கியம், திருக்குறள் போன்றவற்றை போதித்து வந்துள்ளார்கள். எனவே சமயத்துக்கும் கலாசார பண்பாட்டுப் பாரம்பரியங்களும் கோயில்களிலும் மடாலயங் களிலும் காலம் காலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

குரு வழியாகப் போதிக்கப்பட்டு வந்த போதனைகள், கதைகள் நூல்களாகப், பிரசுரங்களாக ஏட்டுச் சுவடிகளில் இருந்தன. தற்போது அவை நூல்களாக வெளிவருகின்றன. மேலும் இவைகள் கணனிகள் மூலம் பதிவு செய்யப்பட்டு எவரும் அனுபவிக்கக்கூடியனவாக ஆக்கப்படுகின்றன. இந்த வகையில் காலத்திற்குக் காலம் பலர் தோன்றினர். சுவாமி ஞானப் பிரகாசர், ஆறுமுகநாவலர், குமாரசுவாமிக் குருக்கள், வைத்திலிங்கம் செட்டியார், தாமோதரம் பிள்ளை, சபாபதி நாவலர், பொன்னம்பலபிள்ளை, ரி. கைலாசபிள்ளை, செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், சுவாமி விவேகானந்தர் எனப் பலர் தமிழும் சைவமும் அழியாது நிலை பெறச் செய்துள்ளனர். அனைவரையும் சமமாக மதிப்பதற்குப் பகுத்தறிவு காரணமாகவுள்ளது. மனிதனின் "அறிவுடைமை" பற்றிய வள்ளுவர் கருத்து ஏற்புடையதே.

"சென்றவிடத்துச் செலவிடாது தீதொரிஇ
நன்றின் பாலுய்வது அறிவு"

என வள்ளுவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

செல்வச்சந்நிதியில் செல்வர், ஏழை, பெரியார், சிறியார் என்ற வேறுபாடற்ற வழிபாடும் ஆச்சிரமத்தில் அன்னதானமும் நடப்பதைப் பார்க்கும்போது ஆண்டவனின் சந்நிதியில் அனைவரும் சமம் என்பது புலனாகின்றது. நான் எனது என்ற அகங்காரம் மமகாரமற்ற சம நிலையில் ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பது தோன்றுகின்றது. வீடு சென்று உணவு உண்ண வசதியிருந்தும் அன்னதானக் கந்தனின் மருந்தாம் உணவருந்தி மகிழ்ந்து செல்வதை நேரிற் பார்க்க முடிகின்றது. வீடுகளில் மாமிசம் இன்றி உண்ணச் சிரமப்படும்

*எந்த விவேகமும் மௌனத்திற்கு ஈடல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் ஆச்சிரமத்தில் மருந்தாக அன்னம் உண்டு மகிழ்வுடன் செல்வது சந்நிதியான் திரு விளையாடலே ஆகும்.

எண்ணெய் இல்லாது விளக்கெரிக்க முடியாது. அதுபோல சந்நிதியான் அருளி னாலேயே இக் கைங்கரியம் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

"கண்ணீரும் கடமை என்பர்" அன்னதானத்தில் பங்குகொண்டு அருமருந்தை உண்ட நாம் ஆச்சிரமத்தை வாயார வாழ்த்துவதோடு இப் பணி சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற இறைவனது அருள் வேண்டும்.

"வயிற்று பசிக்கு அன்னதானம், அறிவுப் பசிக்கு ஞானச்சுடர்" என இப் பணி வளரட்டும்; ஞானச்சுடர் பல எழுத்தாளர்களை அறிமுகம் செய்து அவர்களை வளர்த்து வருகின்றது.

பசியைப்பற்றி கூறிய ஒளவையார் ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய் இரு நாளைக்கேல் என்றால் ஏலாய் இடும்பை கூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது என்கிறார்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பதுபோல் முதற் சபை முடிந்து மறு சபை காத்திருந்து விருந்தினராக வரவேற்கும் நிலை இங்கு காணக்கூடியதாக இருப்பது போற்றுதற்குரியது. இவை என் நெஞ்சிற் பதிந்தவற்றின் சில துளிகள் ஆகும்.

### அறுசீர் விருத்தம்

பசியாற உணவளித்தல் மட்டுமெங்கள்
பணியல்ல ஆன்மீக நெறியில் நின்று
இசை பாடும் பஜனைபிரார்த் தனைபேச்சுக்கள்
எல்லாமே நிகழ்த்துவதெம் பணியேயென்று
இசைவேள்வி பிரசங்கம் வெள்ளிதோறும்
இங்குண்டு அத்தோடு மாதந்தோறும்
பசிதீர்க்கும் பணியோடு ஆன்மீகத்தைப்
பற்றியசஞ் சிகையுண்டப் பணியும்நன்றே
ஆன்மீகச் சொற்பொழிவு வெள்ளிதோறும்
இங்கிருக்கும் மதியவுண வதுவுமுண்டு
மான் மகளாம் வள்ளிமண வாளன்கோயில்
முன்னிருக்கும் மோகன்மடச் சிறப்புநன்றே
ஆன்மீகச் சஞ்சிகையை மாதந்தோறும்
இங்குவெளி யிடுவதுஞ் சிறப்பாமன்றோ!
ஆன்மீக சாதனைசெய் மடமீதென்றால்
ஆலயமே யிதுமுருக னருளாமன்றோ!

-ஆ. விநாயகமூர்த்தி-

*காலம் தவறாமை தொழிலில் ஆத்மாவாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

(தொடர்ச்சி...

## அத்தியாயம் – 10

## தியாகத்தின் வகைகளும் மன ஒருமைப்பாடும்

–திரு பூ. சோதிநாதன் அவர்கள்–

### 19) இரண்டு விளக்கங்கள்

இந்த வினாக்களுக்கு ஓர் உளவியல் விளக்கமும் ஒரு தத்துவ விளக்கமும் உண்டு. விரும்பிய பொருளோடு தொடர்பில் வரும் நேரத்தில் நாம் உணரும் திருப்தி அந்த ஆவலைத் தீர்ப்பதன் விளைவாகும். அந்த விளைவு பொருளை உடைமையாக்க வேண்டும் என்பதோ, அதனை அனுபவிக்க வேண்டும் என்பதோ அல்ல. ஆனால் அதன் விளைவு பொருளோடு தொடர்பில் வரும் நேரத்தில் ஆசையை இல்லாமற் செய்வதற்கே ஆகும். மனதின் நோக்கம் நிறைவேறிவிட்டது என்ற மனதில் ஏற்படும் உணர்வின் காரண மாகவே அதன் விளைவு சம்பவிக்கின்றது. புலன்களின் நோக்கம் அந்தப் பொருளை வைத்திருப்பதும் அல்லது தமக்குச் சொந்தமாக்குவதும், அதிலிருந்து தம்மை விலகாத உணர்வைப் பெறுவதுமே ஆகும். பொருள் உடைமையாக்கப்பெற்று ஒருவரது சொந்தம் ஆக்கம் ஆக்கப்பெறும்போது அந்த நோக்கம் அடையப் பெறுவதாகத் தோன்றுகிறது. அத் துடன் மேலும் புலன்களுக்குத் தேவையில்லாததோடு மனதுக்கும் அப்பொருளை நினைக்க வேண்டிய தேவை இல்லை. "அது என்னுடையதாக வந்துவிட்டது; ஓர் அர்த்தத்தில் அதுவே நான்" ஆகும். அந்தப் புலன்கள் மனதுக்குள் ஆழ்த்தப்பெற்று அம்மனம் புத்திக்குத் திரும் பிப்போகப் புத்தி கீழ்மட்ட ஆன்மாவுக்குப் போகிறது. பின்பு அங்கு கீழ்மட்ட ஆன்மா அடங்கு கிறது. பிரக்ஞை தற்காலிகமாக ஒரு சிறு கணத்திற்கு மட்டும் இருந்தபோதும் ஆறுதல் அடைந்து கொள்ளுகின்றது. அத்துடன் நம் அகத்தே ஒரு கிளுகிளுப்பும், நாம் பொருளை உடைமையாக்கி அனுபவித்து விரும்பியவற்றைப் பெற்றுவிட்டோம் என்றும் உணர்கின்றோம். இது அதன் மிக மேற்பரப்புப் பற்றிய ஓர் அசட்டுத்தனமாகச் செய்யும் ஒரு பெரும் தவறாகும்.

### 20) இரண்டாவது விளக்கம்

தத்துவரீதியாக அதற்குக் கூறப்பெறும் காரணம் சற்று வித்தியாசமானது. ஆன்மா எங்கும் உள்ளது. ஓர் ஆன்மா மட்டுமே உள்ளது. அது எல்லாப் பொருள்களிலும் உள்ளது. பொருள்கள் எங்களைப் பலவந்தமாக இழுக்கின்றன. நாம் பொருள்களை நோக்கி இழுக்கப் படுகின்றோம். அதற்கு மறுதலையாக எம்மைநோக்கி நாம் பொருள்களைப் பலவந்தமாக இழுக்கின்றோம். ஆன்மா தனது சொந்த ஆன்மாவைக் குறிப்புக்காட்டி அழைக்கிறது. அவ்வான்மா காலம் - இடம் என்பவற்றில் வெளிப்புறமாக ஒரு பிரசன்னத்தின் வடிவில் உள்ளது. முடிவில்லாத ஆசையின் ஒவ்வோர் செயலிலும், ஒவ்வோர் புலக்காட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலிலும் உள்ள முடிவில்லாததை அது அழைக்கிறது. அத்துடன் எமது ஆசைகளிலும், செயல்களிலும் கூட நாம் வேண்டுவது பிரபஞ்ச ஆன்மாவையே ஆகும். ஆனால் அந்த ஆசையையோ செயல்களையோ அல்ல. புலன்கள் தமது செயற்பாடுகளுக்குப் பின்னாலுள்ள குறிக்கோளை அறியாது அறியாமையில் இருக்கின்றன. நாம் எதையேனும் தேடும்போது பிரபஞ்ச உயிரையே வேண்டுகின்றோமே அன்றி வேறெதனையும் வேண்டுவதில்லை. பொருள்களை நோக்கிய புலன்கள், மனம், புத்தி என்பவற்றின் இயக்கத்துக்குப் பின்னாலுள்ள உள்ளதன் விளக்கம் அல்லது தத்துவ விளக்கமாகும். சிந்தனையின் ஒவ்வொரு வடிவத்திலும் கீழ்மட்ட ஆன்மாவின் குறிக்கோள் உயர் ஆன்மாவே ஆகும். கீழ்மட்ட ஆன்மா உயர் ஆன்மாவுக்குத் தன்னைத் தகுதியாக அமைத்துக்கொள்ளுவது யோகத்தின் ஒரு படியாகும். இந்த உயர் ஆன்மா பல்வேறு அளவுகளில் வெளிப்படுகின்றது. அத்துடன் அந்த உயர் ஆன்மாவை முழுமையானதென அப்போது கருதவேண்டியதில்லை.

## 21) யக்ஞம்

கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிட்ட யக்ஞம் என்ற கருத்தை மீண்டும் அவதானிப்போம். அகத்துக்கும் புறத்துக்கும் இடையே உள்ள தொடர்பை அடக்கி ஆளுகின்ற தெய்வம் ஒன்று உண்டென்பது அங்கு கூறப்பெற்றுள்ளது. இப்போதைக்கு அத் தெய்வம் உயர் ஆன்மா எனக்கொள்வோம். அத் தெய்வம் அகத்தையும் புறத்தையும் ஐக்கியப்படுத்து கின்றது. இந்தத் தெய்வமே அறிதலினது ஓர் உயர்நிலை ஒளியில் தனிப்பட்ட அகமாக வருகிறது. அதுவே அதற்குச் சொந்தமான புறப்பொருள்கள் ஆகும். மனதால் புரிந்துகொள் வதற்கு இவை யாவும் கடினமானவையே. அத்துடன் நாமொரு கீழ்மட்டத்தில் இருக்கும்போது மிக உயர்நிலைக்குப் போகவேண்டும் என்று கருதத்தேவையில்லை. உடனடியாக உள்ள கீழ்மட்டத்தை அடையும்போது எமக்கு அதிலும் மேலுள்ளதை அறிய வருவோம். ஒவ்வொரு தடவையும் முன்னாலுள்ள ஒரு கட்டத்துக்காட்சி மட்டுமே எமக்குத் தரப்பெறும். ஒரே கணத்தில் எல்லாவற்றினதும் முழுக்காட்சியை எம்மால் வைத்திருக்கமுடியாது. அதற்குமேல் எதையும் எம்மால் அறியமுடியாது. நாம் அந்த இரண்டாவது கட்டத்தை அடையும்போது அல்லது உடனடியாக உள்ள அடுத்தகட்டத்தை அடையும்போது அதற்கு அடுத்த உயர் மட்டத்தின் காட்சியை நாம் பெறுவோம். இயற்கை தனது இரகசியங்களைச் சிறிது சிறிதாகவே உணர்த்துகிறது. அதன் காரணமாக அது முழு இரகசியங்களையும் ஒரே தடவையில் தருவதில்லை.

## 22) உயர் ஆன்மா

கீதையின் ஆறாவது அத்தியாயம் உயர் ஆன்மாவே கீழ்மட்ட ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் தத்துவம் என எமக்குக் கூறுகிறது. கீழ்மட்ட ஆன்மாவின் தியானப்பொருள் உயர் ஆன்மாவாகும். எவ்வளவுக்கு உயர்மட்டத்தோடு கீழ்மட்டம் ஐக்கியம் ஆகிறதோ அவ்வளவு எமது முயற்சிகளில் நாம் வெற்றி பெறுவோம். நாம் எவ்வளவுக்குச் சுயநலம் உள்ளவர்களாகவும், உயர்மட்டம் உள்ளதைக்கூட அறியாதவர்களாகவும் இருக்கிறோமோ

*எதையும் சரிபார்ப்பதில் காலம் தாழ்த்தக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுக்கு நாம் இங்கு வெற்றிகரமாக இருக்கப்போவதில்லை. கீழ்மட்டம் மேல்மட்டத்திற்கு ஏற்றதாகப் பொருந்தி அமையும்போது உயர் ஆன்மா கீழ்மட்ட ஆன்மாவினது நண்பனாக வருகிறது. அத்துடன் கீழ்மட்ட ஆன்மாவுக்கு அப்போது உதவுகிறது. ஆனால் உயர் ஆன்மா ஒரு எதிரியாகக் கூடத் தோன்றலாம்.

## 23) நண்பனும் எதிரியும்

சில சமயங்களில் கடவுள் தானாகவே எமது நோக்கங்களை அமைக்கிறார் என்று எமக்குத் தோன்றுகிறது. அத்துடன் அவர் போதியளவு கருணை உடையவராக இருப்பதில்லை என்றும் தோன்றுகிறது. அதற்குக் காரணம் நாம் கடவுளின் உயர் நோக்கங்களுக்கும், விதிகளுக்கும் ஏற்ப நம்மைப் பொருந்த அமைத்துக்கொள்வதில்லை என்பதே. எனவே உயர் ஆன்மா கீழ்மட்ட ஆன்மாவின் நண்பனாகவும் எதிரியாகவும் உள்ளது. அதன் அர்த்தம், உயர் ஆன்மாவின் நோக்கங்களுக்கும், விதிகளுக்கும், ஒழுங்குகளுக்கும் நாம் பொருந்துபவர்களாக இருக்கும் அளவுக்கு அந்த உயர் ஆன்மா எமக்கு நண்பனாகவும் உதவுவதாகவும் இருக்கும். ஆனால் அதன் நோக்கங்கள், விதிகள் என்பவற்றுக்கு எவ்வளவு பொருந்தாதவர்களாக இருக்கிறோமோ அவ்வளவுக்கு நாம் வாழ்வில் தோல்வி அடைகிறோம். இந்தச் சிநேகபூர்வமான எச்சரிக்கையோடு கீதையில் ஆறாம் அத்தியாயத்தில் உள்ள தியானம் தொடருகின்றது. இது மிகவும் முக்கியமான பகுதியாகும். இது விஞ்ஞான ரீதியாகச் சுய கட்டுப்பாட்டின் தேவையை அழுத்திக் கூறுகிறது. இங்கு விவரிக்கப்பெறும் யோகம் ஓரளவுக்குப் பதஞ்சலியின் யோக சூத்திரத்தை ஒத்ததாக இருக்கின்றது.

## 24) தியானவேளை

தியானத்தில் அமர எமக்கு ஒரு நேரம் இருக்கவேண்டும். அந்த நேரம் முன்னர் குறிக்கப்பெற்றதுபோல வேறு அலுவல்கள் ஏதும் இல்லாததாகவும், அவ்வேளையில் எல்லாவித வேறு கவனங்களில் இருந்தும் நீங்கியவராகவும் இருக்கவேண்டும். அப்போது நாம் "இன்றைய எமது கடமையைச் செய்துவிட்டோம்; இப்போது நாம் சுதந்திரமாக உள்ளோம்" என ஆறுதலான மூச்சு எடுத்துக்கொள்வோம். அதன் பின்புதான் நாம் தியானத்தில் அமரமுடியும். தியானம் தொடங்கி அரைமணி நேரத்தின்பின் "எனக்கு அனேக வேலைகள் உண்டு; அவற்றைச் செய்ய நான் அங்கு போகவேண்டும்" என உணரமாட்டோம். அன்றேல் நாம் தியானிக்கக் கருதுகின்ற ஒன்றில் இருந்து வேறு திசையில் எம்மை அறியாமலே ஈர்க்கப்பெறுவதால் தியானம் சாத்தியம் இல்லாமல் போய்விடும். எனவே தியானத்திற்கான நேரமும், இடமும் வேறு எத்திசையிலும் மனதை ஈர்க்காத அளவுக்கு இருக்கவேண்டும்.

## 25) ஆசனம்

நாம் தியானத்தில் உடலை வைத்திருக்கும் ஆசனமும் எவ்விதத் துன்பத்தையும் தராததாக இருக்கவேண்டும். உதாரணமாகத் தியானத்தின்போது பத்மாசனம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஏதும் ஆசனமாவது போட்டு முழங்கால், முதுகு முதலியவற்றில் வலி உணராது இருக்க வேண்டும். வலியைத் தரக்கூடிய ஆசனம் தியானத்துக்குப் பொருத்தமற்றது ஆகும். ஒருவர் தனது கீழ்மட்ட ஆன்மாவின் தலைவராயின் அவரே தனது சொந்த ஆசனத்தைத் தெரிவுசெய்ய முடியும். வசதியாக அமரக்கூடியதாயின் எந்த ஆசனமும் பொருத்தமென்று பதஞ்சலி தாராளமாகக் கூறுகின்றார். அவர் பத்மாசனம், சித்தாசனம் முதலியவற்றைக் கூறவில்லை. ஏதாவது ஓர் ஆசனத்தில் இருந்தால் போதும் என்கிறார் அவர். அவரது கருத்தில் தியானத்துக்கான ஆசனம் எமது கவனத்தைத் திருப்பாததாகவும், ஏதேனும் வலி உடம்பின் கவனத்தை ஈர்க்காததாகவும் இருக்கவேண்டும். தியானத்தில் ஆசனத்தின் நோக்கம் உடலின் சிந்தனையில் இருந்து விடுவிப்பதன்றி அதனைச் சிந்திப்பதாக இருக்கக்கூடாது. உதாரணமாக எங்கேனும் வலியை உணர்ந்தால் "இங்கே வலிக்கிறது" என உடம்பைப் பற்றிச் சிந்திப்போம். எனவே எதுவாயிருந்தாலும் எமக்கு வேண்டிய ஆசனத்தை நாமே தெரிவு செய்யலாம். இது தொடர்பாக எமக்குப் பூரண சுதந்திரம் தரப்பெறுகிறது. ஆனால் அந்த ஆசனம் இயல்பான பிரக்ஞையைப் பேணக்கூடியதாகவும், மனதை நித்திரைக்கோ, உடல் வலிக்கோ அனுமதிக்காதவாறும் இருக்கவேண்டும். நாம் மேற்கொள்ளும் ஆசனத்தின் பொருத்தமின்மை காரணமாக உடம்பை எண்ணி எமது கருத்துத் திருப்பப்படுவதாகவோ, நித்திரை, சோர்வு முதலானவற்றால் கருத்துத் திருப்பப்படுவதாகவோ இருக்கக்கூடாது. உதாரணமாக நாம் கட்டிலில் படுத்தோமாயின் நித்திரை போவதற்கான சாத்தியம் உண்டு. எனவே படுப்பது ஒரு பொருத்தமான ஆசனம் அன்று. வலியைத் தரும் எவ்வகை ஆசனமும் பொருத்தமற்றது. தியானத்தின்போது விழுந்துவிடக் கூடுமாதலால் நிற்கின்ற ஆசனமும் பொருத்தமற்றது. எனவே நாம் உடம்புக்கு வசதியான ஒரு ஆசனத்தைத் தெரிவு செய்ய வேண்டும். இது தியானத்தின் ஆசனம் பற்றிய விடயமாகும்.

## 26) பொருள் தெரிவு

நேரமும், இடமும், ஆசனமும் இவ்வாறு குறிக்கப்பெற்றிருக்கிறது. இனித் தியானத்திற்கான பொருளை நாம் தெரிவுசெய்ய வேண்டும். பல்வேறு அத்தியாயங்களுக்கூடாகவும் இதுவரை கூறப்பெற்றவற்றில் இருந்து தியானத்திற்கேற்ற பொருளைக் குறிப்பிடுவது போதுமானது. அதனை இன்னும் விரிவாக்கத் தேவையில்லை. முந்திய அத்தியாயங்களில் விவரித்துள்ளதுபோல யோகத்தின் குறிக்கோள் மனதை ஒருமுகப்படுத்த எமது பிரக்ஞையைத் தூண்டுவதாகும். ஏதாவது காரணத்தினால் இதனை எம்மால் செய்யமுடியாதுவிடில் எமது திருப்திக்கு ஏற்றவாறு பொருளைத் தெரிவு செய்யலாம். இங்கு திருப்தி என்பது அந்த வேளையில் வேறெதனையும் சிந்திக்கும் தேவையற்ற பொருளாக இருக்கவேண்டும் என்பதே. உதாரணமாக நாம் பசியோடு இருக்கக்கூடாது. பசியோடு தியானத்தில் அமர்ந்தால் நாம் உணவைப்பற்றிச் சிந்திக்கவோ, உணவைத்தேடி அது உள்ள இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று நினைக்கவோ நேரிடும். பசியோடு இருக்கும்போது நாம் ஏன் தியானத்தில் அமரவேண்டும்? எனவே, எத்துன்பமும் அவ்வேளையில் இருக்கக்கூடாது. தாகமாய் இருந்தால் நீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்திவிட்டுத் தியானத்தில் அமரலாம். பசியாக இருந்தால் ஓரளவு உண்ணலாம். களைப்பாக இருந்தால் கட்டிலில் அரைமணி நேரம் தூங்கலாம். ஏன் நீ உன்னைக் களைப்படையச் செய்யவேண்டும்? யோகம் என்பது உன்னைத் துன்புறுத்தும் ஒரு வழிமுறை அன்று. அது நாம் எம்மையே சித்திரவதைப்படுத்திக்கொள்ளும் ஒரு செயலும் இல்லை. அல்லது அது ஒரு மருத்துவத் தீர்வும் அன்று. வெளியேயுள்ள வேறெவ்வகை வற்புறுத்தலுமின்றி உனது சொந்த விருப்பப்படி முழுமையான கீழ்மட்ட ஆன்மாவினால் ஆனந்தமாயும், இயல்பாயும், மகிழ்ச்சியோடும் செய்யும் ஒரு செய்முறையே தியானம் ஆகும். யோகம் என்பது உயர் ஆன்மாவை நோக்கிய கீழ்மட்ட ஆன்மாவின் ஓரியல்பான இயக்கமாகும்.

*(அத்தியாயம் -10 முற்றுப்பெறுகிறது)*

## உழைப்பின் ஊன்றுகோல்

*உழைத்து, உழைத்து உருக்குலைந்து போனவர்கள் எம் மத்தியில் எத்தனையோ ஆயிரம்பேர்கள் வாழ்கிறார்கள். வாழ்நாள் எல்லாம் வறுமையுடன், காலை முதல் மாலை வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடுகின்றனர். கொட்டும் மழையிலும் கொழுத்தும் வெயிலிலும் நிலம் திருத்தி பாடுபடுகிறான் தொழிலாளி. நாள் முழுவதும் உழைத்தாலும் வெறும் கையுடனே வீடு செல்கிறான். ஆனால் உழைப்பவனை மேற்பார்வை செய்பவனுக்கு அவனைவிட கூடிய ஊதியம் கிடைக்கிறது. காரணம் படிப்பு.*

*படிப்பு இல்லாதவன் ஒருநாள் செய்யும் வேலையை படித்தவன் அரை நாளில் செய்து முடித்துவிடுகிறான். எனவே அவனுக்கு ஊதியம் கூடுகிறது. நேரமும் மிஞ்சுகிறது. இதையே முதலாளிகளும் விரும்புகின்றனர்.*

*சில பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பார்த்து கோபத்தில் பேசுவார்கள்... நாலு எழுத்து படிடா இல்லாட்டி மாடு மேய்க்க அல்லது மூட்டை தூக்கக்கூட லாயக்கற்றவனாய் போய்விடுவாய் என. உண்மையான வார்த்தை.*

*இப்போது பலரும் வெளிநாடு போகின்றார்கள். கல்வியறிவோடு செல்பவர்கள் வாழ்வு சில காலங்களிலேயே மிளிரத் தொடங்கிவிடும். ஆனால் முறையான கல்வித் தகைமையின்றி போவோர் பலர் போவதற்கு செலவு செய்த பணத்தைக்கூட சம்பாதிக்க முடியாது மேலும் வறுமைக்கு ஆளாவதைப் பார்க்கமுடிகிறது. வள்ளுவர், ஔவையார், பாரதியார், கண்ணதாசன் என அன்றிலிருந்து இன்றுவரை கல்வியைப் போற்றிப் பாடாத சான்றோர்கள் இல்லை.*

*எத்தனையோ பேர் நன்றாகப் படித்து பிறரை வழிநடத்தும் மேல் அதிகாரிகளாக, மேதைகளாக பலரால் போற்றிப் புகழப்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. அதிலும் மற்ற சமுதாயத்தைவிட நம் சமுதாயம் ஒருபடி முன்னேறி கல்வியை கடவுளாகப் போற்றி சரஸ்வதி என்ற தெய்வமாக வழிபட்டு வருகின்றது.*

*"கற்க கசடற கற்றவை கற்றபின்*<br>
*நிற்க அதற்கு தக"*

*என்பது திருக்குறள். இக் குறள் மூலம் கூறப்படுவது கற்க வேண்டிய கல்வியை குற்றமறக் கற்று, அதற்கு ஏற்றாற் போல வாழவேண்டும் என்பதுதான். கற்று உலகத்தோடு ஒட்டி வாழ உயர்வோம். உழைப்பிற்கு ஊன்றுகோலாக இருப்பது கல்வியே. எனவே அதனை முறையாக கற்று வாழ்வை வளமாக வாழ்வோம்.*

*அவசியத் தேவைக்கு விதிமுறை கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயமும் விஞ்ஞானச் செழும் புதையல்களும்

– டாக்டர் வெ. சக்திவேல் அவர்கள் –

ஒருவன் முழு மனிதனாகத் திகழ்வதற்குச் சமயமும், விஞ்ஞானமும் இரு கண்களாகத் திகழ்கின்றன. இன்று நாம் அவசர விஞ்ஞான யுகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எங்கு பார்த்தாலும் அவசரம். எதிலும் அவசரம் காணப்படுகின்றது. மனிதன் இயந்திரமயமாகி வருவதைப் பார்க்கும்போது மனிதன் மனிதனாக இருக்காது இயந்திரமாக மாறிவிடுவானோ என்று ஏக்கம் கொள்ளும் நிலையை இன்றைய நவீன விஞ்ஞானம் நமக்குப் பரிசாகத் தந்திருக்கிறது. சமயமானது மனிதனது உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அமைதியான, சாந்த மான உள்ளத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்றால் அதில் மிகை யொன்றுமில்லை. ஆனால் எமது சைவசமயமானது சமய தத்துவம் நடைமுறைக்கு அப்பாற் சென்று விஞ்ஞானக் கருத்துக்களை விஞ்ஞானச் செழும் புதையல்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் சிறப்பார்ந்த சமயமாகத் திகழ்கின்றது. இந்தவகையில் சைவசமயத்திற் பொதிந்து காணப்படும் விஞ்ஞானக் கருத்துக்களை ஆராய்வது காலத்தின் தேவையாக அமைகின்றது.

ஐம்பூத அணுக்களில் யாதாவதொரு பூத அணுவானது நிலையான சக்தியிலிருந்து சலன சக்தியை அடையும்போது அந்த பூத அணுவானது அருவுரு நிலையிலிருந்து பெரிதாகி உருவப்பொருளாக மாறும் நிலையைப் பஞ்சபூதப் பைஞ்சீகரணம் என்று இந்து தத்துவம் குறிப்பிடுகின்றது. நவீன விஞ்ஞானக் கருத்துப்படி அணுக்களிடையே மோதலும் இணைதலும், பிரிதலும் ஆகிய நிகழ்வின்போது அதிர்வுகளினால் ஒலி ஏற்படுகின்றது. உலகத் தோற்றத்துக்கும் அணுக்களின் அதிர்வு அவசியமாகக் கருதப்படுகின்றது. இதேபோன்று அணுக்களால் ஆகிய உலகத் தோற்றத்துக்கும் அணுக்களின் அதிர்வு அவசியமாகக் கருதப்படுகின்றது. இதேபோன்று அணுக்களால் ஆகிய உலகத் தோற்றத்துக்கும் அதிர்வை அடிப்படையாய் கொண்ட ஓங்கார ஒலி அவசியம் என இந்துதத்துவம் வலியுறுத்துவது அணுக்களிடையே நடைபெறும் தாக்கங்களிற்கு அதிர்வலைகள் அடிப்படையாக அமைகின்றன என்பதைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. சடப்பொருள் பலவற்றுக்கும் அலகாகிய அணுக்களின் அசைவு ஒலி அதிர்வைத்தரும் “ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே” என்று திருநாவுக்கரசர் குறிப்பிடுவது சிவதாண்டவமானது அணு அதிர்வின் அடிப்படையில் அமைந்த சக்தி மாற்றத்தினைப் புலப்படுத்தும் தோற்றப்பாடு என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

ஆதியும் அந்தமும் இல்லாதவன் இறைவன் என்று சைவசமயம் கூறுகின்றது. விஞ்ஞான கணித தத்துவமும் அதி உயர் பெறுமானம் உடையதையும் மிக குறைந்ததையும் முடிவிலி என்று கூறி ஆதியும் அந்தமும் இல்லாத முடிவிலியை நம்பித்தான் தனது

*மனிதனின் சொல்லும் செயலும் இரு கண்கள் போன்றவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வை ஆரம்பிக்கின்றது. பராசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி எனப் பல நிலைகளில் வைத்து இந்து சமயம் போற்றுகின்றது. நவீன விஞ்ஞானமும் மின்சக்தி, வெப்பசக்தி, ஒளி சக்தி, ஒலி சக்தி என சக்தியைப் பல்வேறு நிலைகளில் வைத்து ஆராய்கிறது.

சைவ ஆலயங்களிற் பயன்படுத்தப்படும் சாம்பிராணி, சந்தனம், மஞ்சள், குங்குலியம், வெற்றிலை, மிளகு, கிராம்பு போன்றன தொற்றுநீக்கி மூலிகைகளாகப் பிரதானமாக பயன் படுத்தப்படுகின்றன. அபரக்கிரியை முடித்து வருபவரை வேப்பிலையை கொடுத்து மெல்லும்படி சொல்வது வழக்கம். இதுவும் சிறந்த தொற்றுநீக்கியாகவும் காணப்படுகின்றன. குங்கிலியம், தேன், மெழுகு, சுக்கான்கல், கொம்பரக்கு, நாற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணை, சாதிலிங்கம் என்பன அஸ்டபந்தனத்திற்குரிய திரவியங்கள் ஆகும். இவற்றில் முக்கியமாக சாதிலிங்கம், குங்கிலியம், நாற்காவி போன்றவற்றில் கிருமித் தொற்றுநீக்கித் தன்மை காணப் படுகின்றது. இவ்வாறு பல்வேறு கிருமிக்கெதிராகப் பயன்படும் தொற்றுநீக்கிப் பொருள்கள் ஆலயங்களிற் பயன்படுத்தப்பட்டுச் சுகவாழ்வு பேணப்படுகின்றது.

உருத்திராக்கமானது காந்த ஆற்றல் மின் ஆற்றல் உடையதாகக் கருதப்படுகின்றது. இதை அணிவதால் உடற்பொழிவும், உடற்பலமும் பெருகுவதுடன் நோய் அணுகாது எனவும் கூறப்படுகின்றது. மேலும் திருநீறு, உருத்திராக்கமாலை போன்றன அணிவதால் இறைவன் எம்மோடு உள்ளான் என்ற உணர்வையும் உளத் தைரியத்தையும் மேம்படுத்தும் முறைகளாக அமைகின்றன. தீப அலங்காரம் பண்ணிசை, மங்கள இசை ஆகியனவும் மன மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் நடைமுறைகளாகக் கொள்ளலாம். ஆலயங்களிற் பயன்படுத்தப்படும் மலர் அலங்காரமானது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மௌனமாகக் குறியீட்டு வடிவிற் புலப்படுத்துவதோடு சூழலுக்குத் துலங்கல் சூழலை துலங்கச் செய்தல் என்ற அணுகு முறைகளுடன் ஆழ்ந்த மன உணர்வுகளையும் வெளிக் கொணரும். உளச் சிகிச்சை முறைகளுள் ஒன்றாக மேலைநாட்டு உள நிபுணர்களால் கருதப்படுகின்றது.

இந்துக்கள் தம் வீட்டிற் குழந்தை பிறந்தால் ஒரு மாத காலம் வரை தொடக்கு என கூறுவர். தொடக்கு என்ற காரணத்தினால் நோயாளர் உட்பட அதிகமானோர் பிறந்த பிள்ளையையும், தாயையும் சென்று பார்வையிடுவதை குறைக்கக் கூடியதாகவுள்ளது. இச் செய்முறையானது பிறந்த குழந்தையை நோயாளர்கள் தூக்கி விளையாடுவதையும் கர்ப்பத் தினால் பலவீனமடைந்த கர்பிணித் தாயையும் நோயாளர் உட்படப் பார்வையிடுவதைத் தடுப்பதனால் நோய்நிலைத் தாக்கத்தைக் குறைக்கும் வகையில் ஒரு முதல் நிலை தடுப் பாகக் கருதப்படுகின்றது. தமிழும் சைவசமயமும் தமிழர் மருத்துவமும் ஒன்றோடொன்று இணைந்து தமிழரின் வாழ்க்கையை வளம்பெறச் செய்கின்றன முறைமையினால் இந்து தத்துவத்தின் விஞ்ஞான ஆய்வுகள் இக்காலத்தில் முதன்மையான தேவைகளில் ஒன்றாகக் கருதவேண்டியுள்ளது.

*பொறுமையாய் இருத்தல் நல்ல அணிகலன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 77

–ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்–

01 தேசம் ஒன்றில் நீர் பிறந்தமைக்காய் மகிழாமல்
தேசம் ஒன்றில் நீர் பிறந்தமைக்காய் வருந்தாமல்
தேசங்கள் எல்லாமே இறைமடிதான் என்பதனால்
ஏதோஒரு தேசத்தில் நீர் பிறந்ததற்காய் மகிழ்ந்திடுவீர்.

02 தான் கடித்தால் விசமென்று பாம்பிற்குத் தெரியாது
தெரிந்ததால் நாமதனை விலத்தியே நடத்தல் போல்
தீயோர்க்கும் தாமிழைத்தல் தீதென்று தெரியாது
தெரிந்து நாம் விலகிடலே எல்லோர்க்கும் நன்றாகும்.

03 பூவிடத்தோர் வாசமுண்டு பூவிற்கு அது தெரியாது
தெரிந்ததால் நாமதனைப் பேணியே வளர்த்தல் போல்
தந்தையிடம் உழைப்பிருக்கும் அவருக்கது தெரியாது
தெரிந்து நாம் அவர் தம்மைப் பேணுதலே நன்றாம்.

04 பால்சுரக்கும் பசுவிற்கு பாலினெடை தெரியாது
தெரிந்ததால் நாமதற்குப் பணிவிடைகள் செய்தல்போல்
தாயிடத்தே பரிவிருக்கும் அவருக்கு அது தெரியாது
தெரிந்துநாம் பணிவிடைகள் அவற்காற்றல் நன்றாம்.

05 நிலாவிடத்தே நிலவிருக்கும் அதற்குஅது தெரியாது
தெரிந்ததால் நாமதனை அனுபவித்தே மகிழல் போல்
அறிஞரிடம் அறிவிருக்கும் அவர்க்கு அது தெரியாது
தெரிந்துநாம் அவரிடத்தே அறிவுபெறல் நன்றாம்.

06 சாக்கடையில் மணமிருக்கும் அதற்குஅது தெரியாது
தெரிந்ததால் நாமதனை அகற்றியே விடுதல்போல்
மானிடத்தும் துர்நடத்தை குடியிருக்கும் தெரியாது
தெரிந்துநாம் நன்நடத்தை புகட்டுதலே நன்றாம்.

*பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 குறுக்கு வழியொன்றில் செல்வதையே சுலபமென்று
அவ்வழியே சென்றதற்கு தடையிடையில் வருமிடத்து
நேர்வழியில் செல்வதற்குப் பின் நெடுந்தூரம் செல்வதிலும்
எப்போதும் நேர்வழியில் செல்வதுவே சுலபமாகும்.

08 பிறர்கெட்டுப் போகவேண்டும் என நினைப்போர் மாறாக
தாம்கெட்டுப் போவதினை கிஞ்சித்தும் உணரமாட்டார்
தாம்கெடாமல் தரணியிலே தளைத்தோங்கி வாழ்வதற்கு
பிறர்கெடாமல் இருக்கவேண்டும் என நினைத்தல் வழியாகும்.

09 சிறுதுன்பம் ஒன்றினைநீர் சந்திக்க விரும்பாமல்
பெருந்துன்பம் பலவற்றைப் பிறருக்குக் கொடுக்காதீர்
பிறருக்கே பெருந்துன்பம் எனக்கென்ன என்றிருப்பின்
பிறராக நீரோர்நாள் பரிணமித்தே அதைச் சுமப்பீர்.

10 பிறப்பில் இருந்துநாம் இறக்கின்ற வரையிலே
இடையிலே நடப்பவை வாழ்க்கையின் அம்சங்கள்
அம்சம் ஒன்றினையே வாழ்க்கையென்று எண்ணாமல்
வாழ்க்கை வாழ்வதற்கே வாழ்வதுங்கள் கடனாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரபன்மனும் இறைபணியும்

– *திரு செ. சிவபாதம்* அவர்கள் –

இறைபணியென்றால் பக்குவமடைந்த ஆன்மா சிவனோடு ஒற்றுமைப்பட்டுத் திருவருள் வழிநின்று அவருடைய திருவடியை மறவாமல் செய்யும் கருமங்களாகும். பெத்த நிலையில் இறைவன் ஆன்மாவாய் ஒற்றுமைப்பட்டு நிற்பன. ஆன்மா முன்னும் இறைவன் பின்னும் ஆன நிலையில் ஆன்மா ஆணவ முனைப்பில் தொழிற்படும். சீவன்முத்த நிலையில் ஆன்மா இறைவனோடு ஒற்றுமைப்பட்டுச் சிவனேயாய் நிற்கிறது. இந்தநிலை திருவருள் முனைப்புநிலை இந்த நிலையில் இருந்து செய்யப்படும் பணிகள் எல்லாம் இறைபணிகள் ஆகும். பெரியபுராணத்திற் சொல்லப்படும் அறுபத்துமூன்று நாயன்மார்கள் அனைவரும் சிவனோடு ஒற்றுமைப்பட்டு நின்று அவருடைய திருவடிகளை மறவாமற் செய்த பணிகள் எல்லாம் இறைபணிகளாகும். இறைபணிகளால் இவர்கள் பரமுத்தி அடைந்தார்கள். சிவனோடு ஒற்றுமைப்படாமல் அவருடைய திருவடியை மறந்து ஆணவ முனைப்பாற் செய்யும் கருமங்களை எல்லாம் இறைபணியாகா. இவை நல்வினை, தீவினை எனப்படும். இதனால் ஆன்மா பிறப்பு இறப்புக்கு உட்படும். கந்தபுராணத்தில் ஒரு கதை உள்ளது. அது பின்வருமாறு.

தக்கன் சிவனை மதியாது ஒரு யாகம் செய்தான். தக்கன் சிவனை மதியாத காரணத்தினால் அந்த யாகம் பாவமாய் முடிந்தது. அதன் பயனாகத் தக்கன் வீரபத்திரப் பெருமானால் தண்டனைபெற்றுத் தலையை இழந்து இறந்து மீண்டும் ஆட்டுத் தலையுடன் உயிர்பெற்று எழுந்தான். அந்த யாகத்தில் பங்குபற்றிய தேவர்கள், முனிவர்கள், அந்தணர்கள் ஏனையோரும் வீரபத்திரப் பெருமானால் தண்டனை பெற்று இறந்து மீண்டும் உயிர்பெற்றெழுந்து சூரபன்மனுடைய ஆட்சிக்கு உட்பட்டு நூற்றெட்டு யுகம் துன்பப்பட்டார்கள். முற்பிறப்பிலே சாகாதீவரசனுக்கும் மனைவி சுகுமாரிக்கும் சூரன் என்பவனும் பதுமன் என்பவனும் பிள்ளை களாக இருந்து முருகப்பெருமானுக்கு மறுபிறவியில் மயில் வாகனமாகவும் சேவற் கொடி யாகவும் இருந்தும் இறைபணி செய்யவேண்டும் என்று நினைத்து தவம் செய்தவர்கள். அதன் பயனாக இவர்கள் இப்பிறப்பில் காசிப முனிவருக்கு மகனாக ஓர் உடம்போடு இருவரும் சூரபன்மன் என்னும் பெயருடன் பிறந்தவர்கள்.

இந்தச் சூரபன்மன் சிவனை நோக்கித் தவம் செய்து வரம்பெற்று ஆயிரத்து எட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களையும் அரசாள வரம்பெற்றவன். இக் காலத்திலே சூரபன்மன் தேவர்கள் முதலானோரை துன்பப்படுத்தி அவர்களை சிறைச்சாலையில் அடைத்து வைத்து அசுரர்கள் மூலம் துன்பத்தைச் செய்தவன். இந்தத் துன்பத்திலிருந்து தேவர்களைச் சிறை நீக்குவதற்கு முருகப்பெருமான் சூரபன்மனோடு ஆறு நாட்கள் போர் செய்தார். சூரபன்மனும் தனது தவப்பயனாற் பற்பல மாயவடிவங்களை எடுத்து முருகப்பெருமானோடு போர் செய்துகொண்டிருக்கும்போது முருகப்பெருமான் தனது திருக்கரத்தில் உள்ள ஞான சக்தியாகிய வேலாயுதத்தை கையில் எடுத்து வேலாயுதத்தைப் பார்த்து "வேற்படையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு எம்மோடு போர் செய்யும் சூரபன்மனது உடம்பைக் குத்தி இரண்டு பிளவாகச் செய்து மீண்டும் எம்மிடத்தில் வருவாயாக” என்று திருவாய் மலர்ந்தருளி வேற்படையைச் சூரபன்மன் வேறுபடுமாறு விட்டார். இவ்வாறு வேற்படை செல்லும்போது அவனது மாய வடிவங்கள் எல்லாம் அழிந்தன. மீண்டும் சூரபன்மன் தனது பழைய உருவத்தோடு தனது வாட்படையைக் கையில் எடுத்துக்கொண்டு வேலாயுதத்தோடு போர் செய்ய நினைத்து வந்தான். இப்படி வரும்போது வேற்படை சூரபன்மனது உடம்பைக் குத்திக் கிழித்து இரண்டு துண்டுகளாக்கி கடலில் எறிந்துவிட்டு மறக்கருணை வடிவத்தை மாற்றி அருட்கருணை வடிவம் கொண்டு கங்கையில் நீராடி மீண்டும் முருகப்பெருமானுடைய திருக்கரத்திற் போய் வீற்றிருந்தது. இவ்வாறு வேலாயுதம் இருக்கும்போது எனது என்ற சூரன் இருந்த வலது பக்க உடம்பு மயிலாகவும், நான் என்ற பதுமன் இருந்த இடது பக்க உடம்பு சேவலாகவும் உருவம் பெற்று மீண்டும் முருகப்பெருமானோடு போர் செய்ய வந்தன.

அப்போது இப்பிறப்பில் முருகப்பெருமானுக்கு மயிலாகவும் சேவலாகவும் இருந்து இறைபணி செய்யவேண்டும் என்று முற்பிறப்பிற் செய்த தவமானது இப்போது வந்துசேர, மயக்க உணர்ச்சி கொண்ட சூரனும் பதுமனும் முருகப்பெருமானது திருவருள் நோக்கானது தங்களிற் பதிய அறியாமை நீங்கி, வியாபக ஞான அறிவுடையவராகவும் பசுகரணங்கள் பதிகரணங்களாகவும் மாறி பகைமை நீங்கி தெளிந்த மனத்தை உடையவர்களாக நின்றார்கள். இச் செயல் கறுத்த இரும்பு முனிவர்களின் கையிற்பட்டதும் பொன்னாய் மாறிய தன்மையைப் போல் மயில்வாகனமாக நிற்கும் சூரனும் சேவலாக நிற்கும் பதுமனும் முருகப்பெருமானோடு ஒற்றுமைப்பட்டு நின்றார்கள். இப்படி நிற்கும்போது முருகப்பெருமான் பதுமனாகிய சேவலைப் பார்த்து “சேவலே நீ நமது தேர்மீது சேவற் கொடியாய் இருந்து கொக்கு அற என்று கூவுவாய்” என்று பணிக்கப் பதுமனாகிய சேவல் இதுதான் தனக்குத் தகுந்த இறைபணியாகும் என்று துணிந்து தேர்மீது போய் இருந்து கூவிற்று.

இதற்குப்பின் முருகப்பெருமான் இந்திரனாகிய மயில்வாகனத்தில் இருந்து இறங்கித் தன்னோடு ஒற்றுமைப்பட்டு ஞான உணர்வு எய்தி நிற்கின்ற சூரனாகிய மயில்வாகனத்தில் ஏறிச் “சூரனாகிய மயிலே எம்மைச் சுமப்பாயாக” என்று பணிக்க சூரனாகிய மயில் முருகப் பெருமானைச் சுமந்து திரிந்தது. இப்படியாகப் பதுமனாகிய சேவலும் மயில்வாகனமாகிய சூரனும் இப்படிப்பட்ட இறைபணியைச் செய்துகொண்டு இருந்தனர். இதைச் சிவஞானபோதம் பத்தாம் சூத்திரம் ஏகனாகி இறைபணி நிற்க என்று சொல்கிறது. இதன்பின் இந்திரனாகிய மயில் வாகனமும் சேவற்கொடியாய்த் தேரில் இருந்த அக்கினி தேவனும் முருகப்பெருமானின் அனுமதியுடன் தங்கள் இடங்களுக்கு மீண்டன. சூரனதும் பதுமனதும் இறைபணியைப் பின்வரும் கந்தபுராணத்தில் உள்ள பாடல் காட்டுகிறது.

சேவலும் கொடியான் தேரும் சிறைபணி மயிலும் தொன்னாள்
மேவரும் தகரும் வேலும் வேறுள படைகள் யாவும்
மூவிரு முகத்து வள்ளல் மொழிந்திடு பணிகள் ஆற்றிக்
கோவிலின் மருங்கு முன்னும் குறுகி வீற்றிருந்த மன்னோ

*அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொருள்:*

சேவற்கொடியும், கொடியுடைய குதிரை பூட்டப்பட்ட தேரும் மரகதமணி போன்ற தோகையுடைய மயில்வாகனமும், ஆட்டுக்கடா வாகனமும் வேலும் ஏனைய படைகள் யாவும் ஆறுமுகங்களையுடைய வள்ளலான முருகப்பெருமான் இடும் இறை பணிகளைச் செய்துகொண்டு ஆலயத்தின் பக்கத்திலும் சந்நிதியிலும் இருந்தன.

---

## காய்ச்சமரம் கல் எறிபடும்

இப் பழமொழி நம் மத்தியிலே நன்கு பழகிப்போனதுதான். பிள்ளைகளைப் பெற்ற தாயின் பெருமை ஒருபுறமாக. அவள் பிள்ளைகளாற் படும் இடைஞ்சல்களைக் காண்போர் இப்படிப் பேசி ஆறுதல்படுவர். ஆறுதல்படுத்தியும் கொள்வர்.

குசேலரின் மனைவி எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள். குலைகட்டிக் காய்த்த மாமரத்தை நோக்கி எத்தனை கல்லெறிகள் போகும். காயாத மரத்துக்குக் காயமே இல்லை. ஆனால் பெற்றவளுக்குக் கிடைத்த மனக்காயத்துக்கு ஒத்தணம் கொடுக்க ஆருமில்லை. ஆனால் அதிஸ்டவசமாக ஒரு பிள்ளை ஆளாகிக் குடும்ப பாரத்தை ஏற்றால் தாய் ஒரு பெருமூச்சுவிட்டு ஆறுதல் அடைவாள். அவளின் ஊமைக் காயங்கள் எந்த ஒத்தணத்தாலும் சுகம் பெறாது. இப்படியான அனுபவம்தானோ என்னவோ தாயுமான சுவாமிகளின் ஒரு பாடல் நம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது. இனி பாட்டைப் பார்ப்போமே.

காயாத மரமீது கல்லேறு செல்லுமோ
கடவுள்நீ, யாங்கள் அடியோம்
கர்மபந் தத்தினால் ஜன்ம பந்தம்பெறக்
கற்பித்தது உன்னது அருளே
வாயார உண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர்
வைவதுவும் எங்கள் உலக
வாய்பாடு, நிற்கநின் வைதிக ஒழுங்குநினை
வாழ்த்தினால் பெறுபேறுதான்
ஓயாது பெறுவர்என முறையிட்டதால் பின்னர்
உளறுவது கர்மம் அன்றாம்
உபயநெறி ஈது என்னின் உசிதநெறி எந்தநெறி
உலகிலே பிழை பொறுக்கும்
தாயான கருணையும் உனக்கு உண்டு, எனக்குஇனிச்
சஞ்சலம் கெடஅருள் செய்வாய்,
சர்வ பரிபூரண அகண்டதத் துவம் ஆன
சச்சிதானந்த சிவமே.

உளறுவது கர்மம் அன்றாம்- விய வகாரங்கள் பண்ணுதல் நற்கருமம் ஆகா. காய்ச்சமரம் கல்லடிபடும். எம்மைச் சிருஸ்டித்த முதல்பொருளான கடவுள் கல்லெறி பட்டாலும் அவரவர் பக்குவம் கண்டு கடைத்தேற வழிகாட்டுகிறான். எம் கல்லெறி அவனுக்குத்தான். அவன்தானே எம்மைப் படைத்தவன். தினமும் திரும்பித் திரும்பிப் படியுங்கள். கல்லெறிபட்டவன் கருணைபாலித்துக் காட்சி அளிப்பான்.

*-முருகவே பரமநாதன்-*

*அமைதி உள்ள இடத்தில் இறைவன் இருக்கின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனால் கதியிழந்த காரிகைகள்

– திரு வே.வே. அகிலேஸ்வரன் அவர்கள் –

கணவனின் செயலால் கதியிழந்த காரிகைகள் என்ற நிலையினை எடுத்து ஆராய இராமாயணத்தை எடுத்துக்கொண்டால் கோசலை, தாரை, மண்டோதரி போன்றோரை சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் கொள்ளலாம். கோசலை நாடு என்று அழைக்கப்பட்ட அயோத்தி நாட்டிலே எதுவிதமான பாவமும் செய்யாத பெண்ணாக வாழ்ந்து வருகிறாள் கோசலை. ஆனாலும் தசரதனுக்கு கோசலையை விடவும் கைகேயியிடமே அதிக விருப்புண்டு. இதனால் கைகேயி என்ன சொன்னாலும் கேட்கின்ற மனநிலையில் தசரதன் காணப்பட்டார்.

இராமனுக்கு பட்டாபிஷேகம் என அறிவிப்பு கிடைத்துவிட்டது. ஊரே சந்தோஷ வெள்ளத்தில் துள்ளிக்குதிக்கின்றது. கைகேயியும் ஆரம்பத்தில் சந்தோசப்படுகிறாள்.

ஆனாலும் அந்த சந்தோசத்தை சீர்குலைக்கின்றாள் கூனி. சின்ன வயதில் இராமன் விளையாட்டாக அவளுக்கு செய்த செயலை மனதில் வைத்துக்கொண்டு வஞ்சகம் தீர்க்கப் பார்க்கின்றாள். அந்த வஞ்சக உணர்ச்சியால் இராமனை பழிவாங்கத் துடித்த கூனி தக்க தருணத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றாள். இராமனுக்கு பட்டாபிஷேகம் என அறிவித்தபோது இந்த சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தி பழி தீர்க்கப் பார்க்கின்றாள். அதன்படி கைகேயியிடம் தசரதன் அவளுக்குக் கொடுத்த வரங்கள் குறித்து ஞாபகமூட்டியவள், முதல் வரமாக பரதன் நாடாள வேண்டும் என்றும் இரண்டாவது வரமாக இராமன் பதினான்கு வருடங்கள் காடாள வேண்டும் எனவும் தசரதனிடம் வரம் கேட்க சொல்கின்றாள்.

ஆரம்பத்தில் கைகேயி இதனை விரும்பாத போதிலும் "பரதன் நாடாளாது விடின் நீயும் உன் பிள்ளையும் புறம்தள்ளப்படுவீர்கள்" என்று வஞ்சக வார்த்தைகளை அவளிடம் ஓதுகின்றாள். இதனால் தசரதன் அவளுக்கு கொடுத்த வரத்தைக் கேட்க சொல்கின்றாள். அந்த வஞ்சக வார்த்தைகள் கைகேயியின் உள்ளத்தை மாற்றுகின்றது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழுகிறது. ஏன் முன்னைய காலங்களில் அரசர்கள் பல பெண்களை திருமணம் செய்துகொண்டார்கள்? காரணம் ஒரு அரசன் ஒன்றுக்கு மேற் பட்ட பெண்களை திருமணம் செய்துகொண்டால் அவ் அரசன் ஆண்மை மிகப்பொருந்தியவன் என்று அர்த்தமாம். அது மட்டுமல்லாது தன்னுடைய ஆட்சி எல்லைகளை அதிகரிக்க பல நாட்டு அரசர்களின் மகள்களை இவ்வாறு திருமணம் செய்து கொண்டார்களாம்.

தசரதனுக்கு இராமன்மீது மிகுந்த பாசம் இருந்துள்ளது. கைகேயி இப்படி தன்னிடம் இரண்டு வரங்களை கேட்டபோது தசரதன் தாங்கொணா துன்புற்றான். அவ்வரங்களை வழங்கமுடியாமலே மயக்கமுற்றான்.

அதற்கிடையில் கைகேயி தன் திட்டத்தை நிறைவேற்றினாள். இராமனிடம், "இராமன் ஆகிய நீ பதினான்கு வருடங்கள் காடாள வேண்டும். பரதன் நாடாள வேண்டும்" என்பதுதான் உன் தந்தையாரின் கட்டளை என்கிறாள். "நான் ஆண்டால் என்ன? என் தம்பி ஆண்டால்

என்ன? என தெரிவித்துவிட்டு இராமன் காட்டுக்கு புறப்படுகிறார். இராமன் கைகேயியின் அரவணைப்பில் அதிகம் வாழ்ந்தமையால் கைகேயியினை சிற்றன்னையாக பார்க்காமல் தன் தாயாகவே பார்க்கிறார்.

இங்கே கோசலை இராமனைப் பிரிந்திருக்கும் வேதனை நோக்கப்பட வேண்டிய விடயங்களில் ஒன்று. இராமாயணத்திலே கோசலையின் பாத்திரப்படைப்பு மேல் நிலையோடு பேசப்படுகின்றது.

மயக்கத்திலிருந்து எழுந்த தசரதன் இராமன் காட்டிற்குப் போய்விட்டார் என்ற செய்தியைக் கேட்டு தன் உயிரைத் துறக்கிறார். கோசலை கணவனையும் இழந்து பிள்ளை யையும் இழந்து தவிக்கின்றாள்.

அடுத்து கணவனின் செயலால் கதியிழந்த காரிகைகளில் ஒருத்தியாக நோக்கப்பட வேண்டியவள் தாரை. வாலியின் மனைவியே இந்த தாரை. மிகவும் புத்திசாலி. அசுரர்களும் தேவர்களும் மேரு மலையை மத்தாகவும் வாசுகி பாம்பை கயிறாகவும் பயன்படுத்தி பாற் கடலைக் கடைந்தபோது அவர்களால் அமிர்தத்தை பெற முடியவில்லை. ஆனால் அந்த இடத்தில் வாலி தனி ஒருவனாகச் சென்று தேவர்களையும் அசுரர்களையும் புறம் தள்ளிவிட்டு பாற்கடலைக் கடைந்து அமிர்தத்தை பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வாறான பலம் பொருந்தியவன் வாலி. இவ்வாறானவரை சுக்ரீவன் சண்டைக்கு வரச்சொல்லி வலிந்து அழைக்கின்றான். வாலியும் சுக்ரீவனுடன் போருக்குப் புறப்படுகிறார். அந்த சமயத்தில் இராமனின் உதவியோடு சுக்ரீவன் வந்திருக்கிறார் எனவே நீங்கள் போருக்குச் செல்லவேண்டாம் என தாரை தடுக்கிறாள். தனக்கு கிடைக்கவேண்டிய இராஜ்ஜி யத்தையே தனது தம்பிக்குக் கொடுத்துவிட்டு வந்தவர் இராமன். எனவே அவர் முறை தவறி நடக்கமாட்டார் என வாலி உறுதிபட கூறுகிறார்.

உண்மையிலே இங்கே ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். இராஜ்ஜியங்களில் ஒற்றர் படை இருந்ததாக வரலாறுகள் எடுத்துக்காட்டுகிறது. அதேபோல் அரசிகளுக்கும் ஒற்றர்கள் இருந்தார்கள் என்பதை தாரை மூலம் அறியலாம். காரணம் சுக்ரீவன் இராமனின் உதவிபெற்று வந்த செய்தியை ஒற்றன் மூலமே தாரை அறிகிறாள். இன்னுமொரு செய்தி சொல்லவேண்டிய கடப்பாடு இங்கே இருக்கிறது. உண்மையிலேயே தாரையைவிட வாலிக்கு சுக்ரீவன் மனைவிமீது ஈர்ப்பு இருக்கவில்லை. ஆனாலும்கூட தம்பிக்கு பாடம் புகட்டவே அவனுடைய மனைவியை தன் மனைவியாக்கிக் கொண்டார். சுக்ரீவனுக்கும் வாலிக்கும் நடந்த சண்டையிலே இராமனின் தாக்குதலால் வாலி இறந்துபோன பின்பு தாரையின் புலம்பல்கள் ஒவ்வொன்றும் படிப்பவர் மனதை கண்கலங்க வைக்கிறது.

அடுத்து மண்டோதரி. இவள் மயனின் மகள். மண்டோதரி செதுக்கிய பாவைபோல அழகு பதுமையாக விளங்கினாள். ஆரம்பத்தில் அனுமன் சீதையைத் தேடி இலங்கைக்கு வந்தபோது முதலில் கண்டது மண்டோதரியைத்தான். சீதைக்குரிய அங்க பாவமெல்லாம் மண்டோதரியிடம் இருந்ததாக சொல்லப்படுகிறது. மண்டோதரி துயில் கொள்வதை காணும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதை என நினைத்து பொங்கியெழுகிறார். சீதை இங்கே சுகபோக வாழ்க்கை அனுபவிக் கிறாளோ என்று ஐயப்படுகிறார். பின்பு புத்தி தெளிந்து சீதை இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கிறார். மண்டோதரி சீதைக்கு நிகரானவள். சீதையையும் விடவும் அழகானவள் எனவும் சொல்லப்படுகிறது.

மண்டோதரி ஒரு பத்தினி. மண்டோதரியை தவிர இராவணன் வேறு பெண்களின் சம்மதமின்றி அவர்களைத் தொட்டால் அவரது தலைகள் சிதறிப்போகும் என்பது அவனுக்குக் கிடைத்த சாபமாகும். அதனால்த்தான் சீதையை இராவணன் தொடாமல் அவளின் சம்மதத் திற்காக காத்திருந்ததாக சொல்லப்படுகிறது.

இராவணன் சிறந்த சிவபக்தனாக இருப்பதற்குக் காரணமானவள் மண்டோதரி. தனது தந்தைக்காக சண்டையிட்டு போர்க்களத்திலே இறந்து போகிறான் மண்டோதரியின் மகன் இந்திரஜித். போரிலே இந்திரனை வென்ற இந்திரஜித் இறந்து கிடப்பதைப் பார்த்து மண்டோதரி கதறுகிறாள். சின்ன வயதிலே அம்புலியையும், சிங்கத்தையும் கொண்டு விளை யாடும் தன் மகன் தலையற்ற உடலோடு இறந்துகிடப்பதை பார்த்து கதறியழுகிறாள்.

அடுத்து இதே நிலைதான் தன் கணவனான இராவணனுக்கும் ஏற்படும் என கதறு கிறாள். இதனால் இராவணனை போருக்கு செல்ல வேண்டாம் என தடுக்கிறாள். அவளது சொல்லையும் மீறி இராவணன் இராமருடன் போருக்கு சென்று தன்னுயிரைத் துறக்கிறான். அதன்போது மண்டோதரியின் கதறல் சொல்லில் வார்க்கமுடியாது. கணவனால் கதியிழந்த பெண்கள் இலக்கியங்களில் மட்டுமல்ல நிஜ வாழ்விலும் ஏராளம் பேர் இன்றுவரை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

---

*உணர்ச்சி, நெறி, அறிவு இம்மூன்றையும் விளக்கின் சுடர், திரி, எண்ணெய் ஆகிய மூன்றுக்கும் ஒப்பிடலாம்.*

*எண்ணெய் போதிய அளவு இருக்கும் வரையில்தான் சுடர் விளக்கின் முகப்பிலேயே அடங்கி நின்று தன் பணியை ஒழுங்காகச் செய்கிறது. உணர்ச்சிகளின் தன்மையும் இப்படித்தான். அறிவாகிற எண்ணெய் நெறியாகிற திரியின் ஊடே பாய்ந்து நிற்கும் வரையில்தான் உணர்ச்சியாகிற சுடரும் கட்டுக்கடங்கி நிற்கிறது.*

*மனித எண்ண விளக்கில் அறிவு மட்டும் வற்றிவிட்டால் உணர்ச்சிச் சுடர் பெரிதாகக் கிளம்பிக் கட்டுமீறி பின்நோக்கிப் பாய்ந்து படர்ந்து எரிந்து நெறியென்னும் திரியைச் சுட்டுச் சாம்பலாக்கி விடுகிறது.*

*ஆகவே எந்தச் சந்தர்ப்பத்திலும் நெறியுள்ளவர்கள் அறிவுப் பக்கமாகத் திரும்பி அதை அடியோடு வற்றவிடாமல் பார்த்துக்கொள்கிறார்கள். உணர்ச்சிகளுக்கு இடங்கொடுப்பவன் அறிவை அடியோடு வற்றவிட்டு நெறியையும் உணர்ச்சிகளுக்குப் பலிகொடுத்து விடுகிறான். இந்தக் காரணத்தினால்த்தான் நெறியுள்ளவர்களைத் தூங்காவிளக்குக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். மேலிருந்து சதா சர்வகாலம் எண்ணெய் பாய்ந்து கொண்டிருக்கும் தூங்காவிளக்கைப்போலவே நெறியுள்ளவர்களும் எப்பேர்ப்பட்ட இக்கட்டான சமயத்திலும் அறிவைப் பயன்படுத்தி நெறியைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| வி. ஐங்கரன் | இணுவில் | 12 கான் தே. எண்ணெய் |
| பா. வதனன் | தொண்டைமானாறு | 30000. 00 |
| ப. தர்சினி | சிறுப்பிட்டி | 1000. 00 |
| பி. வினிக்கா | லண்டன் | 10000. 00 |
| வி. தனக்குமார் | அளவெட்டி | 1000. 00 |
| K. விஜயகுமார் | கொலண்ட் | 1000. 00 |
| து. சந்திரகுமார் | நீர்வேலி | 5000. 00 |
| த. வசந்ததேவன் | கோண்டாவில் | 3புட்டி அரிசி |
| அதிஷா சரவணன் | இணுவில் | 1மூடை சீனி |
| தனுஷா சரவணன் | இணுவில் | 3k தேயிலை |
| அபிலா சரவணன் | இணுவில் | 2000. 00 |
| திரு துஷாந்குமார் | கனடா | 10000. 00 |
| கலாரஞ்சனி | கனடா | 10000. 00 |
| இ. சுதாகரன் | கிளிநொச்சி | 500. 00 |
| பி. சதுர்ஜன் | இளவாலை 1மூடை அரிசி | 5000. 00 |
| மா. வசந்தகுமார், வ. மாலினி, வ. அட்ஷாயினி | பிரான்ஸ் | 15000. 00 |
| N. சுரேஸ் | நல்லூர் | 10000. 00 |
| க. ஐங்கரன் | மானிப்பாய் | 22000. 00 |
| ப. வனிதாதேவி | பருத்தித்துறை | 5000. 00 |
| M. செந்தூரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| முருகன் அடியார் | யாழ்ப்பாணம் | 1520. 00 |
| சு. சுவி | அச்சுவேலி | 1000. 00 |
| N. பிறேம்ராஜ் | புன்னாலைக்கட்டுவன் | 500. 00 |
| சி. சஹானா | புத்தூர் | 5000. 00 |
| திரு சிவநாதன் குடும்பம் | இணுவில் | 12700. 00 |
| யோ. ரஜீகரன் | புலோலி | 5000. 00 |

*உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்காமல் உழைப்புக்கு முதலிடம் கொடுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மு. தில்லைநாதன் | கொற்றாவத்தை | 15000. 00 |
| யஷ்வின் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வி. சிந்துஜா | இணுவில் | 4புட்டி அரிசி 1000. 00 |
| சி. சித்தார்த் | கல்வியங்காடு | 5k அரிசி 500. 00 |
| பா. அங்குசன் | அச்சுவேலி | 1000. 00 |
| K. வேலாயுதம் | இணுவில் | 2புட்டி அரிசி |
| க. அருட்குமரன் | வெள்ளவத்தை | 40000. 00 |
| கு. அருள்ராஜா | புன்னாலைக்கட்டுவன் | 15000. 00 |
| சு. சோதிலிங்கம் | அல்லைப்பிட்டி | 10000. 00 |
| K. பார்த்தீபன் | மண்கும்பான் | 1000. 00 |
| திரு ஜீவகுமார் குடும்பம் | மானிப்பாய் | 3000. 00 |
| திரு சிவானந்தராசா குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| T. அக்சரன் | திருநெல்வேலி | 5000. 00 |
| T. கணேஸ் | கந்தரோடை | 25000. 00 |
| சி. சதீஸ்வரன் | கரவெட்டி மத்தி | 10000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் ஆத்தியடி | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு நடனேந்திரன் | அராலி | 500. 00 |
| ந. ஹரிகரன் | நீர்வேலி | 1மூடை பச்சை அரிசி |
| ந. முகுந்தன் | வதிரி | 5000. 00 |
| நா. நடராசா | கோண்டாவில் | 30000. 00 |
| திரு பாக்கியநாதன் குடும்பம் | பிரான்ஸ் | 50000. 00 |
| தீபிகா குடும்பம் | ஜேர்மன் | 50000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| திரு யோகர் குடும்பம், திரு யோகீஸ்வரன் குடும்பம் | ஏழாலை | 3000. 00 |
| சி. சிவனேசன் | பருத்தித்துறை | 2000. 00 |
| திரு மகாலிங்கம் குடும்பம் | தெல்லிப்பழை | 6000. 00 |
| R. ராதீஸ் | இணுவில் | 1000. 00 |
| ச. ரூபஜெயன் | நீர்வேலி | 1000. 00 |
| கனுஜா அட்விக் | கோண்டாவில் | 10000. 00 |
| கி. மிருதுளா | தெல்லிப்பழை | 5000. 00 |
| கே. ஹரிஸ் | ஆவரங்கால் | 5000. 00 |
| S. சறோஜினி | நெல்லியடி | 2000. 00 |
| வாணி விஜயதிலகன் | கனடா | 10000. 00 |
| வி. அகரன் | அளவெட்டி | 500. 00 |
| யோ. யோகராஜா | சுவிஸ் | 5000. 00 |
| பு. காண்டீபன் | திருநெல்வேலி | 500. 00 |
| சிவரூபி | கனடா | 7புட்டி அரிசி |
| ஜெ. ஜெயகீதன் | சாவகச்சேரி | 5000. 00 |

***அறிஞன் பிறரைத் தாழ்மையாக நினைக்கமாட்டான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சத்தியா ஜெயபாலன் | கனடா | 50000. 00 |
| பா. அற்புததேவி | ஊரெழு | 1500. 00 |
| போ. ஜனார்த்தனன் | யாழ்ப்பாணம் பருப்பு, சோயா, 2புட்டி அரிசி | |
| த. நிவேதினி | திக்கம் | 15000. 00 |
| க. மகாலட்சுமி | சுன்னாகம் | 2000. 00 |
| ஜெ. ராசகோபால் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| கௌமாறன் சரவணபவன் | கொழும்பு | 5000. 00 |
| ச. ராஜேஸ்வரி | கனடா (காரைநகர்) | 10000. 00 |
| திரு சிவரூபன் குடும்பம் | சுன்னாகம் | 2000. 00 |
| அ. ஸ்ரீதரன் | சுன்னாகம் | 1000. 00 |
| அ. சுதாகரன் | சுன்னாகம் | 1புட்டி அரிசி |
| றொமேஸ் வெனோ | குடத்தனை | 15000. 00 |
| நா. கலாவதி | கொடிகாமம் | 500. 00 |
| சே. குகராஜா | சுதுமலை | 7500. 00 |
| ச. மோகன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு குலேந்திரன் குடும்பம், திரு இளையதம்பி குடும்பம் | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| திரு யோகசுந்தரம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| து. தீபன் | அச்சுவேலி | 5000. 00 |
| மு. பானுரேகா | கரணவாய் | 10000. 00 |
| க. கிருஸ்ணன் நினைவாக | கரவெட்டி | 2000. 00 |
| ரவிமாறன் மேகலா | லண்டன் (ஆதிகோவிலடி) | 5000. 00 |
| சபேஷ் பிரசாந்தி | இணுவில் | 10000. 00 |
| சரஸ்வதி அம்மா நினைவாக | லண்டன் | 1மூடை அரிசி |
| சி. ஞானசரஸ்வதி ரீச்சர் | காங்கேசந்துறை | 1000. 00 |
| K. பேரம்பலம் | வெள்ளவத்தை | 1மூடை அரிசி |
| கு. மகாராணி | குடத்தனை | 4000. 00 |
| தே. தர்ஷிகா | குடத்தனை | 2000. 00 |
| த. லதுஷன் | குடத்தனை | 1500. 00 |
| V. சிவனேசன் | உடுவில் | 5000. 00 |
| க. கவின் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| வை. சுப்பிரமணியம் நினைவாக | அச்சுவேலி | 2000. 00 |
| M. செந்தூரன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| தயாநிதி பாலசுந்தரம் | தெல்லிப்பழை | 1000. 00 |
| வீ. விஜித்தன் | தொண்டைமானாறு | 10000. 00 |
| கு. உதயகுமார் | ஜேர்மனி | 20000. 00 |
| ம. ஜெயந்தி | கனடா | 1550. 00 |
| பாலசிங்கம் முருகதாஸ் | ஊரிக்காடு | 25000. 00 |
| வேல்முருகன் ஸ்ரோர்ஸ் | நீர்வேலி | 3000. 00 |

*வேகமாக முடிவெடுப்பதைவிட விவேகமாக முடிவு செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மயூரன் கார்த்திகா | கொக்குவில் | 1500. 00 |
| ச. விதேஸ் | சிலாபம் | 3000. 00 |
| இ. நடராசா | கொக்குவில் | 8000. 00 |
| திருமதி காயத்திரிதேவி | தாவடி | 2000. 00 |
| ப. ரகுதரன் | ஆனைக்கோட்டை | 5000. 00 |
| திரு ரஜீவ் குடும்பம் | சுன்னாகம் | 5000. 00 |
| த. தர்மகுலசிங்கம் | கைதடி | 1புட்டி அரிசி |
| R. ராணி | கைதடி | 1200. 00 |
| வைஷ்ணவி நகை மாடம் | நெல்லியடி 2புட்டி அரிசி, | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் 1மூடை பருப்பு, | 3மூடை அரிசி |
| க. கஜேந்திரன் | கொக்குவில் | 500. 00 |
| இ. அஜி | இணுவில் | 1500. 00 |
| N. தவராசா | நியூஸ்லன்ட் 1மூடை அரிசி | 2000. 00 |
| நி. ஷாரா | குப்பிளான் | 2000. 00 |
| சு. இராசலிங்கம் | டென்மார்க் | 40000. 00 |
| க. அஸ்வின் | பம்பலப்பிட்டி | 10000. 00 |
| கோ. காந்தருபன் | திருநெல்வேலி | 2000. 00 |
| சி. கேசவன் | கொழும்பு- 06 | 1000. 00 |
| திரு மதனருபன் குடும்பம் | நவிண்டில் | 1000. 00 |
| திருமதி சி. குலராணி | கனடா | 5000. 00 |
| லதா, யாழினி | கனடா | 7000. 00 |
| க. விஜயருபன் | ஊரெழு | 20000. 00 |
| வே. குணராசா | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| கு. வேணுகா | இணுவில் | 2000. 00 |
| நா. பராசக்தி | காரைநகர் | 1000. 00 |
| நா. கபிலநாதன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| வரிசினி | பிரான்ஸ் | 40 யூரோ |
| ம. கஜேந்திரன் | கரணவாய் | 2000. 00 |
| S. சஞ்சீவ் | மயிலிட்டி | 3000. 00 |
| திரு ஸ்ரீவேல் குடும்பம் | லண்டன் | 30000. 00 |
| U. பிரதாபன் | தும்பளை | 1500. 00 |
| சு. பவிதரன் | தும்பளை | 1புட்டி அரிசி |
| T. பாக்கியம் கரவெட்டி | சோயா, பருப்பு, 1மூடை அரிசி, | 5000. 00 |
| டெ. அபிஷாந் | கனடா | 2000. 00 |
| S. நிஷாந்தன் | உரும்பராய் | 3000. 00 |
| மு. யசோதரா | பருத்தித்துறை | 10000. 00 |
| செ. நாதன் | நவக்கிரி | 1500. 00 |
| T. கைலைநாதன் (வேணி ஸ்ரோர்ஸ் மூலம்) | சங்கானை | 1மூடை அரிசி |

*உறுதியாய்த் தீர்மானித்தவனுக்கு எல்லாப் பிரச்சனைகளும் எளிதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவில்களில் அர்ச்சனை

– திரு தி. பொன்னம்பலவாணர் அவர்கள் –

சைவாலயங்களுக்குச் சிறப்புக்களில் ஒன்று அர்ச்சனை வழிபாடாகும். இது மிக நுட்பமான அனுபவமான அடிப்படையில் தோன்றியுள்ளது. தகுதியான அர்ச்சகர் ஒருவர் ஒருவரைக் குறிப்பிட்டு மலர் தூவி வழிபடுவதால் அந்த அர்ச்சனை வழிபாட்டுக்குக் காரணமானவர் இறையருளை விஷேடமாகப் பெறுகிறார். நோய் - கிரகதோஷம் முதலிய சந்தர்ப்பங்களில் விஷேட அக்கறையுடன் அதாவது அர்ச்சனை செய்பவர் செய்விப்பவர் என இரு சாராரும் விஷேட அக்கறையுடன் செய்யும் அர்ச்சனை மிகப் பலர் விடயத்தில் கைமேல் பலனைக் கொடுத்திருக்கிறது.

இன்று சைவாலயங்களில் மிக மலிவாகவும் பொறுப்பற்ற முறையிலும் ஒரு சம்பிரதாய மாக நிகழும் இந்த அர்ச்சனை வழிபாடு தூய நிலையில் நிகழ ஆலயத்துடனும் அர்ச்சனை யுடனும் நெருங்கிய தொடர்புடைய நாம் சைவ மக்கள் விழிப்புணர்வுடனும், அறிவுபூர்வமாகவும் செயற்பட வேண்டும்.

அர்ச்சனைக்குப் பலர் பணம் மட்டும் கொடுத்து செய்விக்கின்றார்கள். பக்தி இறை அனுபவம் போன்ற வேண்டுதலுக்கு மலர் மட்டும் போதுமானதாகலாம். தனிப்பட்ட பயனைக் குறித்து அர்ச்சனை செய்யும்போது தேங்காயோ, பழமோ ஏதாவது ஒரு சிறு நிவேதனமாவது அவசியம். அர்ச்சனையின் பொருட்டு கொடுக்கும் பணம் அர்ச்சனை செய்பவருக்கு உரிய காணிக்கையாகும். அப் பணத்தை கோவில் நிர்வாகத்திற்குப் பயன்படுத்தவென அர்ச்சனைச் சீட்டு முறையிருந்தால் சீட்டுடன் சிறிது பணமும் கொடுப்பது அவசியம். அதனை அர்ச்சனை செய்து விபூதி வாங்கும்போது கொடுக்காது சீட்டுடன் சேர்த்தே கொடுப்பது நன்று. அர்ச்சனைச் சீட்டுடன் பணம் கொடுக்கப்படவில்லையானால் அர்ச்சனைச் சீட்டுக்கு உரிய பணத்தில் தனித்தனி குறிப்பிட்ட விகிதம் அர்ச்சகரை அடையும் நியதி இருக்கவேண்டும்.

இக்காலத்தில் சிலர் அர்ச்சனைக்கு சீட்டு எடுத்தாலே போதும் கடவுள் அறிவார் என்று கருதுகின்றனர். இதேபோல் சிலர் அர்ச்சகரிடம் அர்ச்சனைக்கு எனப் பணம் கொடுத்தால் சரி - செய்வது செய்யாமல் விடுவது அர்ச்சகரைப் பொறுத்து, அர்ச்சகர் அர்ச்சனை செய்யா விட்டாலும் பரவாயில்லை எனக் கருதுகின்றனர். இதேபோல் சில அர்ச்சகர்கள் அர்ச்சனைக்கு எனப் பணம் வாங்கிவிட்டு அர்ச்சனை செய்யாவிட்டாலும் தினமும் தாம் செய்யும் பூசை அர்ச்சனைகள் அப்பணத்துக்கு உரியவருக்கும் பயன் கிடைக்கச் செய்யும் எனக் கருது கின்றனர். இப்படியான கருத்துக்கள் எல்லாம் பொறுப்பின்மையாலும், முறைப்படி மந்திரம் கூறி மலர் இட்டு வழிபடுவதன் பெருமை தெரியாதபடியாலும் உண்டானவையாகும். மந்திர சித்தியும் பக்தியும் அர்ச்சனை செய்விப்பவருக்கு இறையருள் கிடைக்க வேண்டும் என்ற உணர்வும் உள்ள அர்ச்சகர் செய்யும் அர்ச்சனை மிகப் பெறுமதி வாய்ந்ததாகும்.

அதேபோல இங்கு கூறப்பட்ட சிறப்புக்கள் அற்ற அர்ச்சகர் செய்யும் அர்ச்சனை பெறுமதி அற்றதாகும். எனவே இவ்விடயத்தில் எல்லோரும் அக்கறை செலுத்தாவிட்டால்

*பயிற்சி மனிதனை முழு நிறைவாக்குகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனை வழிபாடு ஒரு மூடநம்பிக்கை என்ற குற்றச்சாட்டுக்கு உரியதாவது தடுக்க இயலாததாய் விடும். அர்ச்சனை செய்யும்போது பெயர் நட்சத்திரம் சொல்லும் முறை உண்டு. அர்ச்சனை செய்யும் அர்ச்சகர் மன நிலையையும் செய்விக்கும் அன்பர் மனநிலையை யும் ஒழுங்குபடுத்தும் இனிய கிரியையே சங்கற்பமாகும். அர்ச்சனை செய்விப்பவர் அவர் குடும்பத்தினர் அல்லது உறவினர் நன்மை பொருட்டு அர்ச்சனை செய்கிறேன், செய்விக்கிறேன் என்ற மன ஒழுங்கு சங்கற்பத்தால் உண்டாவது திருப்தியானது. இதைவிட ஒரு அர்ச்சனையின் பொருட்டு பல பெயர்களையும், நட்சத்திரங்களையும் சொல்லும் புது நாகரீக உண்மையில் உள்ளீடு அற்றதாகும். அர்ச்சனை செய்விப்பவரும் கடவுளையும் வழிபாட்டையும் மறந்து உறவினர், நண்பர்களை ஞாபகப்படுத்தும் நிலையே அர்ச்சனை வேளையில் காணப்படுகின்றது. இது உண்மையில் தேவையற்ற ஒன்று. விசேட தினங்களில் பலர் அர்ச்சனையின் பொருட்டு காத்திருக்க சிறப்பான ஆலயங்களில் பலர் நிரையில் நிற்க, பெயர், நட்சத்திரம் சொல்லும் சடங்கு அர்ச்சனைக்குரிய நேரத்தை மிகக் குறைவாகச் செய்து விடுகின்றது. இது பரிதாபத்துக் குரியது. ஆனால் பலர் அர்ச்சனை வேளையில் இப்படி பெயரைச் சொல்வதாலும் சொல்விப்ப தாலும் இறையருள் கிடைக்கின்றது என்று கருதும் மூடத்தனம் நம் சமய அறிவும் ஒழுக்கமும் தெளிவற்று உள்ளதையே காண்பிக்கின்றது.

"இறைவனின் பெரும் புகழையன்றி வேறொன்றும் பேசற்க ஆலயத்துள்" என்ற கருத்தை கவனத்தில் எடுக்க வேண்டும். சைவசமயத்துக்கு உரிய சிறப்பான இவ் வழிபாட்டு முறை அடிப்படைகளில் தவறுகள் இல்லாததாயும் சிறப்பான பயனை என்றும் எங்கும் தரத்தக்கதாகவும் பேணுதல் சைவ மக்கள் கடனாகும்.

---

## இறையருள் எப்போது கிட்டும்?

*இறைவனை அடைவதற்காக யாருடைய பிராணனாவது துடிக்குமானால் அவர் இறையனுபூதிபெற அவ்வளவு தாமதமில்லை என்று தெரிந்துகொள்ளலாம்.*

*ஒருவன் குருவிடம் "சுவாமி இறையருளை எப்படிப் பெறுவது? என்பதை எனக்குக் கூறுங்கள்" என்றான்.*

*அதற்குக் குரு, "வா, காட்டுகிறேன்" என்று கூறி சீடனை ஒரு குளத்துக்கு அழைத்துச் சென்றார். இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். திடீரென்று குரு சீடனின் தலையைத் தண்ணீரில் அமிழ்த்திப் பிடித்துக்கொண்டார். சிறிது நேரத்துக்குப் பிறகு கையை விட்டார். சீடன் பரிதவித்துப் போய் தலையை மேலே தூக்கினான்.*

*உடனே குரு சீடனைப் பார்த்து "எப்படி இருந்தது?" என்று கேட்டார். அதற்கு சீடன், "சுவாமி உயிரே போவதுபோல் இருந்தது. பிராணன் கிடந்து துடித்தது" என்றான்.*

*இதைக் கேட்ட குரு, "எப்போது இறைவனுக்காக உன் உயிர் இப்படித் துடிக்குமோ, அப்போது நீ இறையனுபூதி பெறுவாய். அதற்காக இப்போதிருந்தே இறைவனை சிந்தையில் நினைத்து தியானத்தில் ஈடுபடு" என்றார்.*

***கருணையுள்ள இடமே கடவுளின் சாந்தம் உள்ள இடம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்னி பகவான்

– *திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு* அவர்கள் –

இந்து மதம் பஞ்சபூதங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அகிலமே பஞ்சபூதங்களால் ஆனது. ஏன் எமது உடலே பஞ்சபூதங்களால்தான் ஆனது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பனவே பஞ்சபூதங்கள் எனப்படும். பஞ்சபூத தலங்கள் என ஒவ்வொன்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தலங்கள் தமிழ்நாட்டிலே உள்ளன. அவற்றை நோக்கின் அக்கினிக்கு திருவண்ணாமலையும், ஆகாயத்திற்கு சிதம்பரமும், நீருக்கு திருவானைக்காவும், காற்றுக்கு திருக்காளகஸ்தியும் நிலத்துக்குக் காஞ்சியும் ஆக பஞ்சபூத தலங்கள் அமைந்துள்ளன.

பஞ்சபூதங்களில், அக்னிபற்றி இன்று நோக்குவோம். அக்னியின் வடிவம் பல. ஒளி, சுடர், நெருப்பு எனக் கூறலாம். அதன் சுபாவம் வெப்பம். தேவர்களுள் ஒருவராக அக்னி பகவான் போற்றப்படுகின்றார்.

அக்னியின் அழகினை, அடுத்துத் தீபங்களின் சுடரில் காணலாம். ஆண்டவன் வீதிஉலா வரும்போது ஒளிப்பிழம்பை உமிழ்ந்தவண்ணம் தோன்றும் தீப வரிசைகளில் காணலாம்.

ஆராதனைகளில் தீப ஆராதனைக்கு முதலிடம் உண்டு. அங்கு தீபங்களின் ஒளி மிளிரும். ஆலயத்தின் வாசலிலும் தீப வரிசைகள் காணப்படும். அணையா விளக்காக ஆலயத்தின் கருவறையில் ஒரு தீபம் எரிந்துகொண்டிருக்கும்.

இறைவன் தீபத்தில் தோன்றுவான். கார்த்திகைத் தீபமன்று அண்ணாமலையில் ஒளிப்பிளம்பாக இறைவன் தோன்றினான். தீபாவளியன்றும் லட்ச தீபம் ஏற்றுதல் மரபு. இந்த வகையில் பரம்பொருளின் வடிவமாக தீபத்தைப் பார்க்கிறது, தர்ம சாஸ்திரம். அடுத்து ஆதவன்.

ஆதவன் அகில உலகத்தினதும் தீபம் ஆகின்றான். முதலில் கல்லில் ஒளியைக் கண்டான் மனிதன். வன்னி மரத்தைக் கடைந்து வெளிவந்த அக்னியை எம் முன்னோர் வேள்விக்குப் பயன்படுத்தினார்கள். கல்லிலும் மரத்திலும் அக்னி ஒளிந்திருத்தல் கண்கூடு.

அக்னியை அறிமுகம் செய்ததே மெய்ஞானம்தான். காணும் பொருட்களில் ஊடுருவி இருப்பவன் அக்னி பகவான். பரம்பொருளும் அவ்வண்ணமே. படைத்தல், காத்தல், அழித்தல் என்பவை அவன் பணிகள். அக்னிக்கும் இது பொருந்தும்.

அணையாத தீபமும் அணையாத அடுப்பும் இல்லத்துக்கு இலக்கணம். இல்லத்துக்கு அழகு தருபவள் இல்லாள். இல்லாளையே இல்லம் என்கிறது தர்மசாஸ்திரம்.

வள்ளலாரை நினைத்தால் அருட்பெரும்ஜோதி தனிப்பெருங்கருணையாக எம் மனக் கண்முன் தோன்றுவான் ஈசன்.

புதுமனை புகுவிழாவின்போதும் முதலில் தீபத்தை முன் எடுத்துச்செல்ல வேண்டும். இல்லம் ஒளியால் நிரம்ப வேண்டும். திருமணத்தின் போதும் அக்னி ஓம்பி சடங்குகளை வேதியர் ஆற்றுவர். வாழ்விலும் தாழ்விலும் அக்னியே எமக்குத் துணை நிற்கின்றது. இறந்தவர்

*ஓய்வுள்ள மனிதர்களே இன்பமான மனிதர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமாட்டிலும் ஒரு தீபம் எரியும். கடைசிப் பயணத்தின் போதும் அக்னிமுன் செல்ல பேரக் குழந்தைகள் நெய்ப்பந்தம் ஏந்தி நிற்பர்.

மறு உலகத்தை நோக்கிப் பயணிக்கும் உயிருக்கு வழிகாட்ட தீப தானத்தை சாஸ்திர நூல்கள் பரிந்துரைக்கின்றன. பூத உடல் அக்னியோடு இணைந்து மறைந்து விடும். அவனுக்காக பின்னர் ஏற்றும் தீபம் மோட்சதீபம் எனப்படும்.

திருமணத்தின்போது பொரி போட்டு வளர்த்த அக்னி வாழ்நாள் முழுவதும் அவர்களோடு கூட இருந்து அவர்கள் உயிர்நீத்த பின்னும் அவர்களது பூத உடலைத் தன்னோடு ஐக்கியப்படுத்திக்கொள்கிறது. இந்த வகையில் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதுணை நிற்பவன் அக்னிபகவான்.

அடுப்பிலும் தீபத்திலும் தோன்றி எமது இல்லங்களில் நிரந்தரமாக எம்மோடு இருக்கும். அக்னியை ஆராதனை செய்வது இல்லறத்தவர் ஒவ்வொருவரது தலையாய கடமையாகும் என்கிறது மீண்டும் தர்மசாஸ்திரம்.

அடுப்பூதிய அருந்ததி, விண்மீனாக ஜொலிக்கின்றாள். அக்னியை வணங்கிய திரௌபதி, திரௌபதி அம்மனாக வணங்கப்படுகின்றாள்.

ஆழ்கடலிலும், மலையிலும், விண்ணிலும், மண்ணிலும் அக்னியின் சாந்நித்யம் உண்டு. "வடமுகாக்கினி" என்ற பெயரில் அக்னி கடலில் உறைகின்றான். மின்னல் உருவில் விண்ணில் தோன்றுகின்றான் மண்ணில் வெப்பமாகத் தோன்றுகின்றான். நீரில் ஊடுருவி இருக்கும் வெப்பம்தான் பயிர்களை வளர்க்கின்றது.

பகலிலும், இரவிலும் தோன்றும் சூரிய சந்திரர் உலகை வாழ வைக்கின்றனர். சந்திர ஒளியின் தாக்கத்திலேதான் பயிர்கள் செடி கொடிகள் மருத்துவ குணத்தைப் பெறுகின்றன.

ஆதவனுக்கும் அக்னிக்கும் அதிக வேறுபாடு இல்லை. சூரியன் இரவில் அக்னியுள் ஒன்றி விடுகின்றான். இதனை வேதம் கூறுகின்றது.

அக்னி இல்லாமல் நாம் இல்லை. அதற்காக அக்னியை நாம் தழுவ முடியுமா? அக்னியை வணங்குவோம். அவன் சுடர் மூலம் அருளைப் பெறுவோம். செய்வோமா?

---

## அறவழியில் பொருளும் இன்பமும்

*பொருள்களுக்குத்தான் அதிக மதிப்பு. இதைக்கொண்டு யாரும் தவறான வழியில் செல்வம் திரட்டக்கூடாது. அறத்தின் வழியே பொருள் திரட்டவேண்டும். பிறர் அழ, அழ பொருளைச் சேர்க்கக்கூடாது. பிறரை அழவைத்து சம்பாதித்தால் அவர் மனம் துயருற சம்பாதித்த அனைத்தும் அவன் கையைவிட்டு ஓடிவிடும்.*

*அறம் என்றால் தர்மம் செய்வது. அதுவும் அறத்துடன் இருக்கவேண்டும். ஒருவனுக்கு நாம் பணத்தைக் கொடுக்கின்றோம். அதைப் பெற்றுக்கொண்ட ஒருவன் ஒரு கத்தரிக்கோல் வாங்கி ஊரார் பையையெல்லாம் கத்தரித்துப் பணத்தைத் திருடினால் நாம் கொடுத்ததும் வீணாகிவிடும். ஆகவே தர்மம் செய்வதும் தர்மத்துடன் இருக்க வேண்டும். இன்பம் கூட தாலிகட்டிய மனைவியிடம் பெறுகின்ற இன்பமாக இருக்க வேண்டும். தவறான வழியில் வருகின்ற இன்பமாக இருக்கக்கூடாது. தர்மம் என்பதை ஆராய்ந்து செய்தல் வேண்டும்.*

*தவறு செய்து திருந்துபவன் தன்னைக் கடவுளிடமே ஒப்படைத்து விடுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்

– *திரு குணாகரன்* அவர்கள் –

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்"

என்பது பழமொழி.

மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள்
வில்லும் தாங்கிக் - கால் தரை தோய நின்று
கட்புலக் குற்றதம்மா

எனக் கம்பர் பாடுவதுபோலவே தமிழ்நாட்டில்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருவவதாரம் செய்து கால் தரை தோய நடந்து சென்று எத்தனையோ தெய்வ தலங்களைத் தரிசித்துத் திருமுறைகளையும், திவ்வியப் பிரபந்தங்களையும் அருளிச் செய்தனர். திருக்கோயில் இல்லாதவை "திரு இல் ஊர்கள்" என்று திருநாவுக்கரசர் குறிப்பிட்டிருக்கின்றார்.

கோயில்கள் நமது பழம்பெரும் நாகரீகத்தையும், பண்பாட்டு நலன்களையும் எடுத்துக்காட்டும் அடையாளங்களாகும். பழந்தமிழ் நாட்டில் கோயில்கள்தான் சமுதாய நல அமைப்பு நிலையங்கள் என விளங்கின. சமயம், சமுதாயம், கலையியல், பொருளியல், பண்பாட்டியல் முதலிய பல துறைகளில் கோயில்கள் பெரிதும் பங்குகொண்டு சிறப்புறுகின்றன. பல்லவ, சோழ, பாண்டிய வேந்தர்களும், விஜய நகர அரசர்களும் நாயக்க மன்னர்களும் கோயில்களின் வளர்ச்சிக்கும் அமைப்பிற்கும் அளப்பெருந் தொண்டுகள் ஆற்றியுள்ளனர்.

பழங்காலத்தில் கோயில்களே பள்ளிக்கூடங்களாகவும் கலை வளர்ச்சிக் கழகங்களாகவும் அறம் கூறும் அவையங்களாயும், அறம் கூறும் சாலைகளாகவும், மருத்துவமனைகளாகவும், மக்களுக்கு தொழில் தரும் நிறுவனங்களாகவும் பொருள் கொடுத்தும், வாங்கியும் உதவும் நிதி நிலையங்களாகவும், நலம் வளர்க்கும் மன்றங்களாகவும், போர்க் காலங்களிலே படை வீடுகளாகவும் வேறு பல விடயங்களுக்கும் விளங்கி வந்தன.

நமது கோயில்கள் அயல்நாட்டு அறிஞர்களையும் கவர்ந்தன. காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயில் மதிலைக் கட்டிமுடிக்கக் காரணமாக இருந்தவர் ஆட்சன் என்பவர். மதுராந்தகம் கோயில் திருப்பணியை முடித்தவர் பிளேசு. பவானி சங்கமேதரர் கோயில் ஊஞ்சலை அமைத்து நன்கொடையாக அளித்தவர் வில்லியம் காரேரி. மதுரை மீனாட்சி அம்மனுக்கு தங்கத்தால் செய்த அங்கவடிகளை அன்பளிப்பாகத் தந்தவர் ருஸ்பீட்டர். இவர்களின் பக்தியையும், அன்பையும், ஆர்வத்தையும் என்னென்பது. இத்தகைய கோயில்களே நமது அரும் பெரும் கலைச் செல்வங்களாகும்.

கோயில்களில் சமயச் சொற்பொழிவுகள், புராண படிப்புக்கள், தேவார திருமுறைப் பாராயணங்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. அந்தத் தலத்துக்குரிய தலபுராணங்கள், சிறு சிறு பிரபந்தங்கள் ஆகிய நூல்களை அச்சிட்டு பரப்பப்பட்டு வருகின்றன. பல

*பழிக்குப் பழி ஒருபோதும் காயத்தை ஆற்றாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் பொதுமக்களுக்குப் பயன்படும் பொருட்டு நூல் நிலையங்களும் இலவச வாசிகசாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. வழிபடும் பக்தர்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் பலப்பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பழநி, திருச்செந்தூர், சிதம்பரம் முதலிய தலங்களில் பல இலட்சம் ரூபாய் செலவில் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. கோயில்களில் தூய்மையும், துப்புரவும் நிலைபெறச் செய்து பக்தியுணர்வுச் சூழ்நிலைகள் கண்காணிக்கப் பெறுகின்றன. கோயில் அர்ச்சகருக்கு பயிற்சி வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இறைபணியாளருக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பெறுகின்றன. இவற்றால் கோயில் நடைமுறைகளும், உற்சவம் முதலிய விசேடங் களும் சாத்திர முறைப்படி சரியாக நடைபெறுகின்றன. கோயில்கள் சார்பில் அநாதை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன. பள்ளிச் சிறுவர்களின் பகல் உணவுத் திட்டத்திற்குப் பல கோயில்கள் பேராதரவு புரிந்துவருவது எண்ணி மகிழத்தக்கது. திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களில் பெண்கள் உயர்நிலைக் கல்லூரிகளும் கோயில்களால் நடாத்தப் படுகின்றன.

சீன இந்திய யுத்தத்தின்போது கோயில்கள் தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஏராளமான நன்கொடைகள் வழங்கியதுடன் மேல் மிகுதியான தங்கப் பாத்திரங்களும் வழங்கிப் பேருதவி புரிந்திருக்கின்றன. சிற்பக்கலை வளர்ச்சிக்காக மாமல்லபுரம், சுவாமிமலை ஆகிய இடங்களில் வசதி செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டுக்கே சிறப்பாக உரிய நாதஸ்வரக் கலை குறித்துப் பழநி தேவஸ்தானத்தின் ஆதரவில் நாதஸ்வரப் பயிற்சி நிலையம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. பழநி ஆண்டவர் கீழ்த்திசைக் கலை பண்பாட்டுக் கல்லூரி ஒன்றும் 1961இல் தோன்றி மூன்றாண்டு பீ.ஏ. பட்டப்படிப்புக்காகச் சென்னை பல்கலைக்கழகத்தின் இணைப்பாக இயங்கி வருகின்றது. சமய அறிவையும் உணர்வையும் வளர்ப்பதில் இத்தகைய அமைப்புக்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

தமிழ்நாட்டுக்கே உரிய சித்த மருத்துவக்கலை வளர்ச்சியினைக் குறித்துத் தஞ்சை மாவட்டத்தில் திருப்புகலூரிலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் பன்மொழியிலும் சித்த மருத்துவசாலைகள் தோன்றிப் பொது மக்களுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. சமய வளர்ச்சியும் விளக்கமும் கருதிக் கோயில் என்னும் திங்கள் இதழும் 1958 அக்டோபர் முதல் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இன்று நமது ஈழநாட்டில் எத்தனையோ ஆலயங்களுக்குப் பக்தர்கள் சென்று வழிபட்டுப் பல உதவிகளைச் செய்து வருகின்றார்கள். அவ் ஆலயங்கள் பொது மக்களின் பயன்பாடு குறித்து சேவை ஆற்றுகின்றதா? என்றால் மிகக் குறைவே என்று கூறத்தான் வேண்டும். இந்நிலை மாறவேண்டும்.

---

*மனித வாழ்க்கையை ஒரு நாலுமாடிக் கட்டிடத்துக்கு ஒப்பிடலாம். பிரம்மச்சர்யம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம். இவை நான்கும் மனிதனின் நான்கு நிலைகள். பிரம்மச்சர்யம் அஸ்திவாரம். அஸ்திவாரம் உறுதியாக இருந்தால்த்தான் மற்ற மூன்று நிலைகளும் தானாகவே உருவாகும்.*

*இயற்கையாக வருவது பேச்சு. புரிவதால் வருவது மௌனம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள்

-திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்-

யாழ்ப்பாணத்தில் சித்தர் பரம்பரை ஒன்று ஞான பரம்பரையாகத் தோன்றி, உருவாகி, ஆன்மீக, ஞான ஒளி பரப்பியது. சித்தர் பரம்பரையின் தோற்றுவாய் நல்லூர்க் கந்தன் ஆலயத் தேரடியையும் அதன் பரம்பல் ஆலயச் சூழலையும் நிலைக்களனாகக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரையின் மூலவர் கடையிற் சுவாமிகள் ஆவார். நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில் உலாவியவர் செல்லப்பா சுவாமிகளின் ஞானகுரு. அவரைத் திருவருட்பார்வையால் ஆட்கொண்டு நல்லூர்த் தேரடியில் நிஷ்டைகூடச் செய்தவர். யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரையைத் தொடர வைத்தவர்.

உலகின் ஆதியோகியும், முதற் சித்தரும், சிவபெருமான் என்பது நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. சிவனும் முருகனும் வேறல்லர்; ஒருவரே என்பது கந்தபுராணம் தரும் செய்தி. நல்லூர் முருகன் ஆலயம்; மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களைக் கொண்டுள்ளது. முருகன் ஆலயச் சூழலில் குறிப்பாகத் தேரடியில் யாழ்ப்பாணத்துச் சித்தர்கள் நிட்டை கூடியதற்கும், வாசம் செய்தமைக்கும்; சீடர்களுக்கு உபதேசம் செய்தமைக்கும்; முருகனைத் தமது ஆதி சித்தராகக் கொண்டமையினாலேயே என்பது உணர்தற்பாலது.

## செல்லப்பாச்சுவாமிகள் வரலாற்றுப் பின்னணி:

நல்லூர்ப் பதிக்குத் தென்திசையில் அண்மையில் நெற்செய்கை, தோட்டச் செய்கைக்கு ஏற்ற காணி நிலங்கள் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட்டுக்கோட்டை என்னும் ஊரைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவர் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்மா என்னும் மங்கை நல்லாளைத் திருமணம் செய்து நல்லறமாகிய இல்லறம் நடத்தி வந்தார். வயலோரத்தில் சிறிய வீடு அமைத்து, அங்கு அமைதியாக வாழ்ந்து வந்தார்கள். வேளாண்மை செய்து, கிடைத்த வருவாயைக் கொண்டு, வளமாகக் குடும்பம் நடத்தி வந்த காலப்பகுதியில், நல்லூர்க் கந்தனின் திருவருளினால் நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். அவர்களில் ஆண்கள் இருவர்; பெண்கள் இருவர். ஆண்களில் ஒருவர் செல்லப்பா எனும் பெயருடையவர். அன்னாரே பின்னாளில் செல்லப்பாச் சுவாமிகள் எனும் பெரும் சித்தராக விளங்கியவர். அவர் பிறந்த ஆண்டு 1860 ஆகும்.

செல்லப்பா தமது ஆரம்பக் கல்வியைக் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றுத் தேர்ந்தார். அதன் பின்னர் ஆங்கிலக் கல்வி கற்பதற்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சேர்ந்தார். அங்கு ஒருசில ஆண்டுகள் கல்வி கற்றபின் அவர் தமது கல்லூரிப் படிப்பை இடைநிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. குடும்பச் சூழ்நிலை காரணமாக வேதனம் பெறும் தொழில் ஒன்றினை மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்.

*தேவைகள் இல்லாதவனே பெரிய பணக்காரன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கச்சேரி அலுவலகத்தில், ஆராய்ச்சியாகக் கடமையேற்றுத் திறம்பட அப்பணியை ஆற்றிவந்தார். மேலதிகாரிகளின் அபிமானத்திற்கும், பாராட்டுதலுக்கும் பாத்திரமானார். பல தடவைகள் களஞ்சியப் பொறுப்பாளராகவும் பதிற் கடமையாற்றும் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றார்.

ஆங்கிலேயர் ஆட்சி, இலங்கையில் நடைபெற்றுவந்த காலப்பகுதி அது. வெள்ளைக் காரத் துரைமார்களும் மற்றும் மேலதிகாரிகளும் செல்லப்பரின் கடமையுணர்வு, கண்ணியம், கட்டுப்பாடுகளுக்கமையப் பணிபுரியும்பாங்கு, நேர ஒழுங்கு பேணல், நன்னடத்தை என்பவற்றை மதித்துப் பெரிதும் பாராட்டினார். சிற்றூழியராகப் பணியாற்றிய போதும் மேலதிகாரிகளால் மதிக்கப்பட்டார். எனினும் காலப்போக்கில் செல்லப்பர்; உலகியல் சார்ந்த விடயங்களில் நாட்டமில்லாத ஒருவகையான போக்கினையும், நடைமுறைப் பாங்கினையும் கொண்டிருத்தலை; அவதானித்த எல்லோருக்கும் அவர் ஒரு புதிராகவும் விசித்திரமாகவும் தோன்றினார். உள்ளத் துறவு, உலகப்பற்றுக்களிலிருந்து விடுபடுகின்ற உன்னதநிலை; என்பவற்றில் செல்லப்பர் ஈடுபாடு கொண்டு, ஆன்மீகப் பாதையில், துரிதமாக முன்னேறிக்கொண்டிருப்பதை சாதாரண மனிதர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள், செல்லப்பரை ஒரு மனநோயாளியாக எண்ணி, அலட்சியப் படுத்தினர்.

"சித்தன் போக்கு சிவன்போக்கு" என்பர். செல்லப்பரின் சித்தம், தெளிவு ஏற்பட அவ்வுயர்நிலையை அறிந்துகொள்ள முடியாத சாதாரண மனிதர்கள்; செல்லப்பருக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டதாக எண்ணினர். ஆனால் செல்லப்பரோ பிறரின் விமர்சனங்களை அலட்சியப்படுத்திவிட்டு தனது ஆன்மீக இலட்சியத்தை நோக்கி அத் தூய பாதையில் சென்றுகொண்டிருந்தார்.

**செல்லப்பரின் துறவு:**

செல்லப்பர் காலப்போக்கில் தாம் பார்த்துவந்த அரசாங்க உத்தியோகம், செல்வாக்கு, அதிகாரம், அவற்றால் கிடைக்கப்பெற்ற மதிப்பு, புகழ் போன்ற உலகியல்சார் பெருமைகளில் மனம் செலுத்த விரும்பாதவராய்; அவற்றைத் துச்சமெனப் புறந்தள்ளிவிட்டுத் தனது உள்ளத்தில் ஊற்றெடுத்து எழுச்சிபெற்றுப் பிரவாகித்த ஓர் இனம்புரியாத ஆன்மீக அலையினால் ஈர்த்து இழுத்துச் செல்லப்பட்ட வண்ணம் காணப்பட்டார்.

செல்லப்பரின் உள்ளத்துறவு மலர்ச்சிபெற்று வருதலுக்கான அங்க அடையாளங்களாக அவரின் நடத்தைகள், உடை, பாவனை மற்றும் போக்குவாக்குகள் தென்பட்டன. எனினும் தம்மை ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு கச்சேரிக்கும் போய் தமது உத்தியோகக் கடமைகளையும் ஆற்றி வந்தார். தாமரை இலையும் அதன்மேலுள்ள தண்ணீர்த் துளிகளையும்போல ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து வந்தார். பிறரின் கேலி கிண்டல்களுக்குப் பிடிகொடாமல் தாம் உண்டு, தம் வேலை உண்டு என்ற மனப்போக்கில் புற உலகில் நடமாடி வந்தார்.

நிலையாமை பற்றியும் மற்றும் ஆன்மாவின் அழியாமை, நாம் சென்றடைய வேண்டிய உண்மைப் பொருள்; மெய்ப்பொருளைச் சென்றடைவதற்கான வழித்தடம் - இவை பற்றிய

*மௌனத்தைவிடப் பேச்சிற்கு வருந்தியோர் அதிகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையிலும் ஆராய்ச்சியிலும் எந்நேரமும் மூழ்கியிருந்த செல்லப்பர் வெளியுலகத்தவர்க்கு; வெளிப்பார்வையில் பித்துப்பிடித்தவர்போலவும்; பேய்பிடித்தவர் போலவும் காட்சி அளித்தார். அவரின் அகத்தில் ஞானம் சுரந்து பெருக்கெடுத்தமை பற்றி, புறத்திலுள்ள மனிதர்களுக்கு அறிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு ஆற்றல் இல்லை. அதனால் எல்லோரும் அவரை ஒரு மாதிரிப் பார்க்கத் தொடங்கினர். எனவே இந்நிலைமையை உணர்ந்துகொண்ட செல்லப்பர், தமது ஆராய்ச்சி உத்தியோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சுதந்திரப் பறவையாகக் கச்சேரியைவிட்டு வெளியேறினார்.

## நல்லூரானைத் தஞ்சமடைதல்:

முற்றும் துறந்த மகா ஞானியாகச் சுற்றித்திரிந்த செல்லப்பாச் சுவாமிகள் நல்லூர்க் கந்தப்பெருமானைத் தஞ்சமடைந்தார். தன்னை மறந்தார்; தன் நாமம் கெட்டார்; தன் தலைவன் நல்லூரான் தாள்களை இறுகப்பற்றிக்கொண்டு, தலைவனுடன் வாழத் தலைப்பட்டார். இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்னும் உயர்நிலையினை எய்தினார்.

நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில் வாழ்ந்த காலத்தில் செல்லப்பா சுவாமிகள் ஆலயத்தில் அர்த்தசாமப் பூசை நிறைவுபெற்றதன் பின்னர் கந்தசுவாமியாருடன் தொடர் பாடல் நடத்தி வந்தமை பற்றியும்; “பிதாவே, பிதாவே” என்று அரற்றியும், பிதற்றியும் வந்ததாகவும் கர்ணபரம்பரைச் செய்திகள் உள்ளன. இறைவனைத் தமது உள்ளத்தில் அமர்த்தி ஆனந்தத்தைச் சுவைப்பதில் அபார மகிழ்ச்சியடைந்து, அதில் திளைத்துக் காணப் பட்டார். அந்த ஆனந்தத்தின் வெளிப்பாடாகவே அவரின் ஆடல், பாடல் மற்றும் அரற்றல், பிதற்றல் என்பன அமைந்திருந்தன. அதனைச் சாதாரண மனிதர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனாலேயே, சுவாமிகளுக்குப் பலவாறான இடையூறுகள் செய்தும், பைத்தியக்காரன் என்று பட்டஞ் சூட்டியும் அவரை மலினப்படுத்தினர்.

செல்லப்பாச் சுவாமிகள் வெளியே உலகத்துறவில் விசர்க்கோலமும்; உள்ளத்திலே ஒடுக்கமும், ஞான நாட்டமும், சிந்தனையும் கொண்டு நல்லூரான் திருவருள் வெள்ளத்தில் நாளும் நனைந்து மூழ்கியிருந்த காலத்திலே நல்லூரை வட்டமிட்ட கடையிற் சுவாமிகளின் கடைக்கண் பார்வையும், தீட்சையும், உபதேசமும் கிடைத்தன என்று நம்புவதற்கு இடமுண்டு எனப் பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது.

## குருவருள் பெற்றமை:

கடையிற் சுவாமிகள் யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரையின் முதல்வர் ஆவார். செல்லப்பாச் சுவாமிகளுக்குக் கடையிற் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு வழங்கப்பெற்ற தீட்சை நயனதீட்சை என்பது உய்த்துணர்தற்பாலது. நயனதீட்சை என்பது குருவின் திரு நோக்கினால் சீடனுக்கு வழங்கப்படும் தீட்சையாகும். “குருவே யுரையுணர்வற்ற தோர்கோவே” என்கிறார் திருமூலர். எத்தகைய உரையோ உணர்வு வெளிப்பாடோ இல்லாமல் குருவின் பார்வையால் நிகழ்த்தப்படுவது நயனதீட்சை.

*செலவழித்து நிம்மதியாயிரு. ஆனால் வீணாக்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையை, மயக்கத்தை, மாயை இருளை நீக்குபவர் குரு. அதேவேளை அறிவை, மெய்ஞ்ஞானத்தை, பேரொளியை வழங்குபவர் குரு. குரு என்பதன் பொருள் இவ்வாறு அமைகின்றது. இறைவனே மானிட உருவம் தாங்கி, சற்குருவாக வந்து அருட்பார்வையால் பக்குவர்களை ஆட்கொள்கிறார் என்கிறார் பெருஞ்சித்தரான திருமூலர். இங்கு நல்லூர் முருகப்பெருமானே கடையிற் சுவாமிகள் வடிவத்திலே எழுந்தருளி வந்து செல்லப்பாச் சுவாமிகளுக்கு நயனதீட்சை வழங்கி ஆட்கொண்டார் என்பது பொருள் பொதிந்த கூற்று.

கடையிற் சுவாமிகள் இச் சித்தர் பரம்பரையைத் தொடருவதற்கு முற்றிலும் தகைமையும், தகுதிப்பாடும் கொண்டிருப்பவர் செல்லப்பாச் சுவாமிகளே எனத் தீர்மானித்த வராய் அவருக்கு நயனதீட்சை மானசீகமாக அளித்து அவரைச் சீடராக ஏற்றுக்கொண்டார். இந்நிகழ்வு "எப்பவோ முடிந்த காரியம்" என்ற சுவாமிகளின் மகா வாக்கியத்திற்கு விளக்கம் தருவதாக அமைந்துள்ளமை நோக்கற்பாலது. நிகழ்வுகள் யாவும் ஒரு கணத் திலேயே மானசீகமாக நடைபெற்று நிறைவுபெற்றன. சான்றாக ஒரு ரூபாய் நாணயக்குற்றியை ஓர் வெற்றிலையில் வைத்து மடித்துக் குருநாதர் சீடரின் கரங்களில் வைத்ததாகச் செவிவழிக் கதை ஒன்று உண்டு.

குருவருள் கிடைக்கப்பெற்றதன் பேறாக, செல்லப்பரின் புறக்கோலம் முன்னிருந்தபடி இருக்க, அந்தக் கரணங்களான மனம், புத்தி, சித்தம் என்பன தூய்மைபெற்றன. அதன் விளைவாக பசுக்கரணங்கள் அனைத்தும் பதிகரணங்களாகத் தன்மாற்றம் அடைந்தன. அவரின் உள்ளொளி பெருகி, உலப்பிலா ஆனந்தத்தில் மிதந்து கொண்டிருந்தார். அவரின் நடத்தை முறைகளில் ஆனந்தம் வெளிப்பாடானது. சாதாரண மக்களுக்கு அவரின் போக்குவாக்குகள் விசித்திரமாகத் தோன்றியதில் வியப்பில்லை.

உலப்பிலா ஆனந்தத் தேனைச் சுவைத்து, அதில் மயங்கியவண்ணம் மூழ்கியிருந்த படி உலகியல் வாழ்க்கையை முற்றிலாகத் துறந்து; நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் தேர்முட்டி அருகேயுள்ள வில்வமரத்தடியில் அமர்ந்து நிட்டைகூடிய நிலையில் காணப் படலானார். செல்லப்பாச் சுவாமிகளின் தியான நிட்டையானது பல நாட்களுக்கு, மாதக் கணக்கில்கூட நீடித்திருக்கும் என்று கூறப்படுகிறது. அந்த நாட்களில் அன்ன ஆகாரங்கள் எதுவுமின்றித் தொடர்ந்து நிட்டையில் இருப்பர் என்ற செய்தியும் உள்ளது. கடவுளுடன் ஆத்மார்த்தமாக ஐக்கியப்பட்ட நிலையில் இவையாவும் தேவையற்றவையே ஆகும்.

(தொடரும்...

## பெரியோரைப் பற்றிக்கொள்

*பலமற்ற கொடியானது உயர்ந்த மரத்தைச் சுற்றிக்கொண்டு வானம்வரை உயர்கிறது. மரத்தைப் பற்றிக்கொள்ளவில்லை என்றால் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகின்றது. கல்லைத் தண்ணீரில் போட்டால் மூழ்கிவிடுகிறது. அதே கல்லைக் கட்டையால் செய்யப்பட்ட படகின்மேல் வைத்தால் மிதந்து செல்கிறது. அதைப்போல நம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கும் பெரியோரைப் பற்றிக்கொண்டால் நாமும் உயர்வடையலாம்.*

*சரியான பாதையைத் தேர்ந்தெடுத்தால்தான் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எமையாண்ட அத்தனாய் மிளிர்ந்த ஆறுமுகநாவலர்

*-திரு சிவக்கொழுந்து அவர்கள்-*

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி, வாழ்வாங்கு வாழ்ந்து முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்பதே அல்லாமல் வேறொன்றுமில" என்பதை முதன் முதலாக எமக்கு மந்திரமாக எடுத்து இயம்பியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானேயாவார். சீவனே சிவன் என்னும் தெளிவு உண்டாகுமாறு, சைவசமயத்தையும், தமிழையும் குழந்தைகள் தொடக்கம் பெரியோர்கள் வரை தேனென இனிக்குமாறு தித்திக்க ஊட்டியவர் நாவலர் ஒருவரே என்று சொன்னால் அது மிகையாகாது. அழகு தமிழிலே எளிய நடைமுறையில் தமிழன்னைக்கு அலங்கார மகுடம் சூட்டி, உலகமே வியக்குமாறு தமிழன்னையை வரமாக்கி, சிவப்பரம்பொருளைக் கரங்கூப்ப வைத்த மகான் நாவலர் பெருந்தகையே! இன்று நாம், தமிழர் என்று சொல்வதற்கும், தலைநிமிர்ந்து நிற்பதற்கும், தமிழ் நூல்களை எழுத, வாசிக்க, படிக்க, பாட, பரப்ப, ஓத, பட்டமதாக்க, பாவிக்க மூல காரணமாய் அமைந்த பாக்கியவான் ஆறுமுகநாவலர் அவர்களேயாவார்.

தமிழில் வசன நடை கைவரப்பெற்ற தமிழ்ப் பேருபகாரி மட்டுமல்ல, சைவர்கள் ஒவ்வொருவரையும் சமயிகளாக வாழ தாம் வாழ்ந்து காட்டிய தவநெறி வரங்கொண்ட சிவசூரியனாக, (1822 - 1879) எங்கும் எதிலும் பிரகாசித்தார். பாலபாடம், சைவ வினாவிடை, பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், நீதி நூல்கள், நன்னூல், தொல்காப்பியம் முதலாக 60 நூல்களை தானே தம் கையே தமக்கு உதவியென ஒவ்வொரு அச்சு அச்சாகக் கோர்த்து, தானே தாபித்த அச்சு இயந்திரசாலையில் அச்சடித்து, செவ்வை பார்த்து எந்தவொரு பிழையும் வராமல் அட்சரசுத்தி செய்து தமிழ் மண்ணையும் தமிழ் நாட்டையும் வாசிக்க வைத்து பேறடையுமாறு நூலாக்கியும் தம்மை அர்ப்பணித்த அருட்பெரும் புண்ணியசீலர் ஆறுமுகநாவலர் ஒருவரேயாவார். தம் புகழ் பரப்பாமல், சம்பளத் துக்கு சமயம் இயற்றாமல், உடல் பொருள் ஆவி அத்தனையையும் தமிழுக்காய், சைவ சமயத்திற்காய் தியாகித்த தன்னிகரில்லா தனிப் பெருந்தலைவனை அவரது இருநூறாவது ஜெனன தினத்தில் சைவத் தமிழ் உலகம் சிரம் தாழ்த்தி பேறடைவோமாக.

*முடிந்த பிரச்சனைகளுக்காக வருந்தாமல் வருங்காலத்தை துணிந்து எதிர்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

*(தொடர்ச்சி...*

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## 10) முடிவேந்தரை அவமதித்த மொய்குழலாள்

வறுமையால் வாடிய புலவர் ஒருவர் பரிசில் வழங்கும் வள்ளல்களைத் தேடி ஓர் சாலை வழியே போய்க்கொண்டிருக்கிறார். இடைநெறியில் யானை, குதிரை முதலிய பரிவாரங்களோடு எதிர்ப்பட்ட ஒருவரைக் காண்கிறார். கண்டதும் "இவர் ஓர் குறுநில மன்னர்; தம்மிலும் மேலான அரசனுக்குக் கப்பம் கட்டப் போகிறார்போலும்" என்னும் எண்ணம் உண்டாகிறது அவருக்கு. அவர் எதிர் சென்று வணங்கி, "ஐயா! உமது தேசம் எது? உமது பெயர் என்ன? இத் திறைப் பொருள்களை யாருக்குக் கொண்டு போகின்றீர்?" என்று வினவுகிறார். அவர் சிரித்து, "ஐயா! புலவரே யானும் உமது வகுப்பைச் சேர்ந்தவன்தான்; ஒரு புலவனே! இவை அனைத்தும் திறைப் பொருள்கள் என்று நினைத்துவிட்டீரோ! இல்லை இல்லை. பரிசிலாகப் பெறப்பட்டனவே, என்ன ஐயா விழிக்கின்றீர்! இவ்வாறு அளிக்கும் வள்ளல்களும் உளரோ!" என்னும் வியப்போ! ஒன்றும் வியப்பில்லை. இவற்றை வழங்கிய வள்ளல் ஆறைநகர்க் காவலன் ஏகம்பவாணன்தான். அவனிடம் சென்றால் நீரும் பெறலாம்; வேறு யாரும் பெறலாம்" என்றார்.

"அப்படியா ஐயா! அந்தப் பிரபுவை எங்கே எப்படிக் காணலாம்? சற்றுக் கூறுவீர்களா? எனக் கேட்டார் புலவர்.

"நான் சொல்லும் அடையாளத்தின்படி சென்றால் அவரைக் காணலாம். ஆறைநகர் அவர் உறைவிடம். அங்கே பெரிய மாளிகை ஒன்று உளது. அதன் அருகில் ஆத்தி, உயர்ந்த வேம்பு, பனை, அரசு, அரசைச் சுமந்தவாறு சில அத்தி இவை நிற்கும்; இதுவே அடையாளம். இந்த அடையாளங்களால் எளிதில் தெரிந்துகொள்ளலாம்; விரைவாகச் செல்லும், உமது அவா அடங்கச் செல்வம் பெற்று வரலாம்" என்றியம்பி அனுப்புகிறார் வந்தவர்.

ஆத்தி என அத்திப்பூ மாலை தரித்த சோழனையும், வேம்பு என வேப்பம்பூமாலை அணிந்த பாண்டியனையும், பனை என பனம்பூமாலை சூடிய சேரனையும், அரசு என மற்ற அரசர்களையும், அரசைச் சுமந்த அத்தி என அரசர்களைச் சுமந்து நிற்கும் யானைகளையும் குறிப்பிட்டு, இவர்கள் அனைவரும் ஏகம்பவாணன் அரண்மனை முன்றலில் அவனைக் காணும் சமயம் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள் என்று அடையாளம் காட்டினார் அவர். இவ்வாறு புலவர் இருவர் பேசிக்கொண்டதாகக் கற்பனை செய்துகொண்டு அதன் வாயிலாக ஏகம்பவாணனின் பெருமையைச் சித்தரித்துக் காட்டுகிறார் ஒரு புலவர்.

ஏகம்பவாணன் சோழ நாட்டிலுள்ள ஆறை என வழங்கும் ஆற்றூரில் ஆயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்து வந்த ஓர் பிதா. வேளான் மரபினன். பேரரசர்க்கு ஒப்பாகக் கூறத்தகுந்த திரண்ட செல்வமும் செல்வாக்கும் உள்ள பெரு நிலக் கிழவன் சேர சோழ

***உண்மையானவருக்கும் அன்புடையவருக்கும் யாரும் அஞ்சத் தேவையில்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியர்களாகிய முடி மன்னரும் நட்புகொண்டு அளவளாவிப் பாராட்டும் சிறப்புடையவன். தன் குலத்தொழிலாகிய வேளாண் தொழிலையே மேன்மையாகக் கருதி நடத்தி வந்தான். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரிடம் கல்வி கற்கும் பேறு பெற்றவன். ஆசிரியர்பால் அளவிலா அன்பு பூண்டவன். நன்றி பாராட்டலாக அவரது பெயரைத் தன் பெயரோடு இணைத்து வழங்கி வந்தான். (ஏகன் - கம்பன் - வாணன்) தமிழ்ப் புலவர்களோடு பேசிப் பழகுவதில் தனி ஆர்வம் அவருக்கு இருந்தது. அருங்கலைவாணர் பலர் என்றும் அவர் மனையில் குழுமியிருப்பர். தன்னை நாடிவரும் தண்டமிழ் வாணரைப் பெரும் பொருள் ஈந்து மகிழ்விக்கும் வள்ளல் என அவரைப் புகழ்ந்தார் இவர். அன்றியும் பேரரசர்களையும் அவர்கள் அஞ்சுமாறு அடக்கும் ஆற்றல் வாய்ந்தவர் ஏகம்பவாணன் எனக் கம்பர் கூறியதாகச் சில பாக்கள் உள்ளன. அவற்றில் ஒன்றைக் காண்போம்.

அலங்கல் அணிமார்பன் ஆறையர் கோன் வாணன் '
விலங்கு கொடுவருக என்றான் - இலங்கிழையீர்!
சேரற்கோ, சோழற்கோ, தென் பாண்டி நாடாளும்
வீரற்கோ, யார்க்கோ விலங்கு?

"எங்கே அந்த விலங்கை இங்கே கொண்டுவா" என்று கூறினானாம் ஏகம்பவாணன். ஏவளாளனை நோக்கி உடனே இவர் திகில்கொண்டு விட்டாராம். "ஐயோ, 'விலங்கை எடுத்துவா' என்றானே, அது எவர்க்காகவோ! சேரனுக்கோ, சோழனுக்கோ, பாண்டியனுக்கோ, வேறு யாருக்கோ" என்று சந்தேகம் வந்துவிட்டதாம் அவருக்கு! இதுதான் இச் செய்யுளின் பொருள்.

புலவர்களின் இப்புகழுரைகள் சற்று மிகைப்படுத்திக் கூறுவதாக இருக்கலாம்; ஆனால் முழுமையும் பொய் எனத் தள்ளத்தக்கன அல்ல என்பதை மறுத்தல் ஆகாது. இவ்வாற்றல் ஏகம்பவாணன் கொடையிலும் கல்வியிலும் வீரத்திலும் சிறந்தவன் என்பது புலனாகின்றது.

ஏகம்பவாணனின் வாழ்க்கைத் துணைவியாகிய பெண்மணியும் உயர்குடிப் பிறப்பும், அதற்கேற்ற செவ்விய ஒழுக்கமும், மனையறம் வழுவா மாண்பும் வாய்த்தவர். கொழுனன்பால் குறையா அன்பும் பெரு மதிப்புக்கொண்ட கற்பரசி வரும் விருந்தினனை ஓம்பும் வேட்கை மிக்குடையவர். இலக்கண இலக்கியங்களை தக்க ஆசிரியரிடம் முறையாகப் பயின்று நிரம்பிய புலமையுடையவர், தன் மதிப்பு, பழிக்கு நாணுதல் முதலிய பண்புகள் மிகுதியும் அவரிடம் குடிகொண்டிருந்தன.

ஏகம்பவாணன் வைகறையில் துயிலெழுவான்; எழுந்ததும் வயல்களைச் சுற்றிப் பார்க்கச் செல்வான். அவன் முதல் வேலை இதுதான். வேளாண்மையை முக்கிய தொழிலாகக் கொண்டோரின் முதல் கடமையும் இதுவேயன்றோ! பண்ணையாட்கள் உண்மை உழைப்பாளிகளாய் இருப்பினும், நிலத்துக்கு உரியோரின் கண்காணிப்பு இல்லையெனின், நிலங்கள் நல்ல பயனைத் தரமாட்டா. "அதைச் செய்தாயா? இதைச் செய்தாயா? அப்படிச் செய் - இப்படிச் செய்" என இருந்த இடத்தில் இருந்தவாறே கட்டளை இடுவதோடு தம் வேலை முடிந்ததாக எண்ணித் திரியும் சோம்பரின் வாழ்க்கை, இருப்பது போலக் காணப்பட்டு

*அன்பின் வலிமை வெறுப்பின் வலிமையைவிட மிகப்பெரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இல்லாததாய் விரைவில் அழிவுறும். உடையவனைக் கண்டால்தான் நிலத்திற்கு மகிழ்ச்சி உண்டாகும்; ஆகையால் அவன் நாடோறும் சென்று பார்த்து, செய்யவேண்டியதைச் செய்ய வேண்டும்; அங்ஙனம் செய்யாவிடின், கணவன் உபசரிப்பைப் பெறாத மனைவி அவன்மேல் வெறுப்புக்கொண்டு கோபித்துக்கொள்வதுபோல, அந்த நிலமும் பயன்தராதொழியும் என்பது வள்ளுவப் பெரியார் வாக்கு. தவிர, காலையில் கதிரவன் தோன்றுமுன் உறக்கம் நீக்கி எழுந்ததும் வயல்களைப் பார்க்கச் செல்லுதல், காலை உலாவல், கதிரொளியில் மூழ்கல், நல்ல காற்று உட்கொள்ளல் முதலியன உடற்பயிற்சி சாதனமுமாகும். அதனால் உடல் வன்மை பெறுதல், பிணிகள் அணுகாமை முதலிய நன்மைகள் பல உளவாகும். தம்முன்னோர்கள் உடல் வீரமும் நீண்ட ஆயுளும் கொண்டிருந்ததற்கு அவர்களின் வாழ்க்கை நெறி இவ்வித நன்முறையில் அமைந்திருந்ததுதான் காரணம். இன்றும் அம் முறைகளைக் கைக்கொண்டிருக்கும் கிராம மக்கள் உடல் கட்டும் வலிமையும் உள்ளவர்களாயிருத்தலையும், பலவகைச் சூழ்நிலைகளால் அந்த முறைகளைக் கைக்கொள்ளும் வாய்ப்புப் பெறாத நகர மக்கள் வலிகுன்றி மெலிந்த உடல்வாகு கொண்டவராய் இருப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோமே!

வழக்கம்போல் ஏகம்பவாணன் ஒருநாள் வயல்களைச் சுற்றிப் பார்க்கப்போயிருந்த சமயம் முடி மன்னர் மூவரும் அவனைக் காண அவனது மாளிகைக்கு வந்தனர். தலைவர் இல்லாமையால் கருமத் தலைவர்கள் அவர்களை வரவேற்று, அணிசெய்யப்பெற்ற பெரிய மண்டபத்தில் இருக்கச் செய்தனர். "ஐயா அவர்கள் வெளியில் வயலுக்குப் போயிருக்கின் றார்கள்; வரும் வேளை ஆயிற்று; அவசரமாகப் பார்க்க விரும்பினால் ஆள் அனுப்புகிறோம்" என்றனர். அதுகேட்டு அரசருள் ஒருவர், "ஓ ஓ! முடி நடப்போயிருக்கின்றார்களோ! குலத்தொழில் அல்லவா!" எனக் கூறி நகைத்தார். மற்றவர்களும் "கலகல" எனப் பேரொளி எழச் சிரித்தனர்.

பிரபுவின் இல்லக் கிழத்திக்கு எட்டியது அரசர்கள் உரைத்த செய்தி. அந்தப் பரிகாச வார்த்தை தம் கணவரை அவமதிப்பதாக அவர் கருதினார். "என்ன முடி நடப் போயினரோ என்றா கேட்கிறார்கள்! என்ன செருக்கு இம் மன்னர்களுக்கு? முடி நடல் இழிவான தொழில் என எண்ணினர் போலும்! முடி நடப்போயினரோ என்றுதானே கேட்கிறார்கள்? ஆம், முடி நடத்தான் போயினர்; என்ன முடி! என்ன முடி! நாற்று முடியல்ல, மூவேந்தர் தங்கள் முடி! மூவேந்தர் தங்கள் முடி!" எனத் திரும்பத் திரும்ப மொழிந்தது சீற்றத்தால் அவர் வாய். அந்த வாக்கியம் ஓர் வெண்பாவின் ஈற்றடியாக அமைந்திருந்தது. அவர் சீற்றம் தணியாமையால் மேலும், "ஆம் போர்க்களமாகிய வயலில் மூவேந்தரின் சேனைகளை வெட்டித் தழையாக இட்டு, அவற்றின் உடலினின்று பெருகும் குருதியாகிய நீரைத் தேக்கப்பாய்ச்சி, தான் ஏறிச் செல்லும் யானையின் காலால் மிதிப்பித்து சேற்றில் மூவேந்தரின் முடியை ஏகம்பவாணன் பறித்து நட்டான்" என ஓர் கருத்து அந்தச் செந்தமிழ்ப் புலமைச் செல்வியின் உள்ளத்தில் உருப்பெற்று வெண்பாவாக வெளிவந்தது. உடனே அவர் ஏடும் எழுத்தாணியும் எடுத்தார். அப்பாடலை வரைந்தார். வேந்தர்களுக்கு அனுப்பினார்.

*விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ் வெண்பா

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி
ஆனை மிதித்த அடிச்சேற்றில் - மானபரன்
மாவேந்தன் ஏகம்பவாணன் பறித்து நட்டான்
மூவேந்தர் தங்கள் முடி.

ஏவலர் நீட்டிய ஓலையை வேந்தர் ஒருவர் வாங்கி, "இது என்ன! செய்யுளாக உள்ளதே" எனப் படித்தார். முகம் சாம்பியது. மற்றவர்களிடம் காட்டினார். அவர்களுக்கும் விடயம் விளங்கிவிட்டது. ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்கள். உடல் வியர்த்து, உள்ளங் கலங்க, அச்சம் ஒருபால் தோன்ற, "விளையாட்டு வினையாய் முடிந்ததே" என வருந்தினர். முதலியார் இச் செய்தியை அறியின் யாது விளையுமோ?" என வெருவினர். "இனி இங்கிருத்தல் தவறு; விரைவின் நீங்குதலே நலம்" எனக் கொண்டனர். "அவசரமாக கவனிக்க வேண்டிய அலுவல்கள் சில எங்களை எதிர்நோக்கியிருத்தலால் முதலியார் வரு மளவும் தங்கியிருக்க இயலவில்லை. அவர் வந்த பின்னர் எங்கள் வருகையைத் தெரிவியுங்கள்; நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம். மேலும், முதலியாரைக் குறித்து வேடிக்கையாக நாங்கள் பேசியது அம்மையாரின் மனதைப் புண்படுத்தியதாக அறிகிறோம். அதற்காக மிகவும் வருந்துகிறோம். எங்களை மன்னிக்குமாறு நாங்கள் வேண்டிக்கொண்டதாக அம்மை யாரிடம் தெரிவியுங்கள்" எனக் கருமத் தலைவரிடம் சொல்லிவிட்டுச் சென்றனர், மன்னர் மூவரும்.

கருமத் தலைவரால் அரசர்களின் மன்னிப்புச் செய்தியை அம்மையார் அறிந்தனர். அதன் பின்னரே அவர் உள்ளம் அமைதியுற்றது. கணவனை இழிவாகப் பேசியதை வேடிக்கைக்காக இருப்பினும் - பொறாத மான உணர்ச்சியும், அரசருக்கும் அஞ்சாத தீரமும், விரைந்த கவியியற்றும் ஆற்றலும் வாய்க்கப்பெற்ற அந்த அம்மையார் முற்காலத் தமிழ்ப் பெண்டிரின் பண்பாட்டு நிலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது அல்லவா!

இக்காலப் பெண்கள், கணவனைப் பெயர் சொல்லி அழைப்பதும், மற்றவர் முன்னே கணவனை வசைபாடுவதும் சர்வ சாதாரணமாக நிகழ்வதை கேட்கும்போது பாரதியின் புதுமைப்பெண்.....?

(தொடரும்...

---

*நல்ல உணர்ச்சிகளை வளர்த்துக்கொண்டால்தான் மனிதன் என்ற பெயருக்குத் தகுதியுடையவன். வெறும் வடிவினைக் கொண்டு ஒருவனை மனிதன் என்று கூறலாகாது. நல்ல பழக்கங்களைக் கொண்டவன் எவனோ, எவன் எப்போதும் உதவி செய்கிறானோ, எவன் ஒருபொழுதும் மற்றவனை துன்புறுத்தவில்லையோ அவனே உண்மையான மனிதன். மனிதன் என்பவன் யார்? வெறும் வடிவத்தில் மட்டும் மனிதனாக இருந்தால் போதாது. செயல்முறையிலும் மனிதனாக வேண்டும். நல்லதைப் பேச வேண்டும். நல்லதைக் காண வேண்டும். நல்லதைச் செய்ய வேண்டும். நல்லவனாக இருக்க வேண்டும்.*

*ஊக்கமுள்ள மனிதன் தன் கடமையைச் செய்யத் தவறமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வாசகர்போட்டி 2023

**வினாக்கள்**

01) "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்னும் சொற்றொடரை வழங்கிய பெருமான் யார்?
02) மீண்டும் பிறவாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
03) சைவசமயம் எதனை ஒழிக்கச் சொல்லுகின்றது?
04) செய்குநரில்லாத தேசம் என்று யாழ்ப்பாணத்தை பழித்துக் கூறியவர் யார்?
05) மா மனிதன் என்பதன் பொருள் யாது?
06) திருவிருட்சம் என்று கூறப்படும் மரம் யாது?
07) இறைவனை அடைவதற்கென்றே ஞானிகளால் வகுக்கப்பட்ட ஆறு சமயங்கள் எவை?
08) விலை கொடுத்தாலும் பெறமுடியாத ஒரு பொருள் யாது?
09) ஆலயத்தின் மூர்த்திகரம் எதனூடாக வெளிப்படுத்தப்படுகின்றது?
10) உள்ளத்தை எவ்வாறு தூய்மையாக்குவது?
11) நடராஜப் பெருமானுக்குரிய ஐந்து சபைகள் எவை?
12) மாதுளம்பழத்தில் இருந்து வெளிவந்த தேவி யார்?
13) பண்டார மும்மணிக்கோவை என்ற நூலை இயற்றியவர் யார்?
14) பங்குனி உத்தரத்தில் விஷேடமாக இடம்பெறும் செயற்பாடு யாது?
15) "அதிரவரு மாணிக்ககங்கை தனில்மூழ்கி" எனும் பாடலை பாடியவர் யார்?
16) திருநீற்றுக்குரிய மறுபெயர்கள் ஐந்தைக் கூறுக.
17) வாழைப்பழத்தை உரித்து பழத்தைத் தூக்கி எறிந்துவிட்டு தோலை அன்புடன் கிருஷ்ணருக்கு உண்ணக் கொடுத்தவர் யார்?
18) "நித்திய கர்ம விதி" எனும் கைநூலை எழுதி வெளியிட்டவர் யார்?
19) பன்னிரண்டு வருடகாலம் கார்த்திகை நட்சத்திர விரதத்தை பக்தி சிரத்தையோடு வழிபட்டவர் யார்?
20) வண்டுருத்தாங்கி சிவனை மட்டும் வலம்வந்து வணங்கிய முனிவரின் பெயர் யாது?
21) மதங்கள் எதனை அடிப்படையாக வைத்து தமது செயற்பாடுகளை செய்து வருகின்றன?
22) "உன்னைப்போல் பிறரையும் நேசி" இது உணர்த்துவது எக் கருத்தை?
23) காரைக்காலம்மையார் வழங்கிய மூன்று நூல்கள் எவை?
24) ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமிகளை "அன்னதானப் பணியையே செய்" என்று கூறிய பெரியார் யார்?
25) சக்தியானவள் பசு வடிவத்தில் வந்து சிவபெருமானை தரிசித்த தலம் எது?

*முயலும் வெல்லும் ஆமையும் வெல்லும். ஆனால் முயலாமை என்றும் வெல்லாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

2023ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.

விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக் கப்படமாட்டாது.

விண்ணப்பங்களை **வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு** என்ற முகவரிக்கு 20.01.2024 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.

போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## நீங்கா நினைவில்....

சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான சமூகப்பணிகளுக்கும் தன்னாலான பங்களிப்பை நல்கிவருபவரும், யாழ்ப்பாணம் வேணி களஞ்சியத்தின் உரிமையாளருமான திரு குமாரசாமி கங்கைவேணியன் அவர்களின் தாயார் திருமதி குமாரசாமி மீனாட்சி அவர்கள் 99ஆவது வயதில் காலமான செய்தியறிந்து மிகவும் துயருற்றோம்.



அன்னாரின் ஆத்மா நிரந்தரமாக ஆண்டவனின் பாதாரவிந்தங்களில் இளைப்பாறப் பிரார்த்திப்பதோடு, பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*-சந்நிதியான் ஆச்சிரமம்-*

*மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத வாராந்த நிகழ்வுகள்

**01.12.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "உண்மைப் பொருள்"

வழங்குபவர் :- ஆசுகவி சி. சிவசுப்பிரமணியம் அவர்கள்

---

**08.12.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**15.12.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மகாபாரதம்" **(தொடர்)**

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**22.12.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "முருகநாம பஜனை"

வழங்குபவர்கள்:- முருகன் அடியார்கள்

---

**29.12.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் மார்கழி மாத வெளியீடு

**312ஆவது மலர்**

வெளியீட்டுரை :- திரு சோ. பரமநாதன் அவர்கள்

[இளை. கிராம சேவகர்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்

[இளை. பிரதிக்கல்விப் பணிப்பாளர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org